பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 21 ஞாயிற்றுக்கிழமை (07-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 11

## லண்டன் மாவீரர் நாள் நிகழ்வில் அன்ரன் பாலசிங்கம் அழைப்பு

# வெளியுறவுக் கொள்கையை மாற்றி இந்தியா

# ஈழத் தமிழருக்கு நேசக் கரம் நீட்டவேண்டும்!



## புலிகளுடன் நட்புறவை பேணவும் வலியுறுத்து!!

- லண்டனில் இருந்து றோஜன் -

லண்டன்,டிசெம்பர்7

"வெளியுறவுக் கொள்கைகளை மாற்றி, ஈழத்தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டி, விடுதலைப் புலிகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று இந்தியாவுக்கு அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.

இந்தியாவுக்கு ஆத்திரமூட்டி அதனைப் பகைத்துக்கொள்ள நாம் விரும்ப வில்லை. தொடர்ந்தும் இந்தியாவை எமது நட்பு சக்தியாக, நேச சக்தியாகவே நாம் கருதுகின்றோம். இந்தியாவின் தேசிய நலன்களுக்கோ, பிராந்திய நலன் களுக்கோ ஏன் பொருளாதார நலன்களுக்கோ குந்தகம் ஏற்படும் விதத்தில் புலிகள் நடந்துகொள்ளமாட்டார்கள் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

லண்டனின் புகழ்பெற்ற எக்ஸெல் (Excel) மண்டபத்தில் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டினார்.

எக்ஸெல் மண்டபத்தில் பிர மாண்டமான முறையில் மாவீரர் இல் லம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு கூடியிருந்த 12 ஆயிரத்துக்கும் மேற் பட்ட மக்கள் மாவீரர்களுக்கு அஞ் சலி செலுத்தினர். அதன் பின்னர் அன் ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார். இலங்கை நேரப்படி அதிகாலை 1.15 மணிக்கு அவரது உரை ஆரம்பமா னது. 2.20 மணி வரைக்கும் அது தொடர்ந்தது.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக அங்கீகரித்துள்ள னர். இந்நிலையில் விடுதலைப் புலி களைப் பயங்கரவாதிகள் என்று கூறிக் கொண்டு இந்தியாவால் இலங்கை யில் எதுவும் செய்யமுடியாது. விடு தலைப் புலிகளுடன் இந்தியா நட்பு றவை வளர்க்கவேண்டும் தனது வெளி யுறவுக் கொள்கைகளை மாற்றி புதிய அணுகுமுறையை இந்தியா வகுக்க வேண்டும்.

நான் இங்கு பேசுவதாக முன்னரே அறிவிக்கப்பட்டதால் இந்தியாவின் புலனாய்வுத்துறையினர் கூட இந்த மண்டபத்தில் இருக்கலாம். இந்தியா வுக்கு எமது செய்தி சென்றடைவது தான் சரியானது.

காலம் காலமாக இந்தியாவைப் பகைத்து வந்த விரோத சக்திகளான எதிர்க்கட்சிகளும் சிங்கள இனவாத அமைப்புக்களும் இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டுகின்றன. இந்தியா வுடன் நட்புறவை வளர்க்கமுனையும் அந்தச் சக்திகள் இந்தியப்படை இங்கு வரவேண்டும் என்று கோருகின்றன.

இந்தியாவுக்கும் விடுதலைப் புலி

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பிக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு; அதனால்தான் புலிகளிடம் சரணடைந்தேன்

### அந்த அமைப்பின் உறுப்பினர் கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.7

ஈ.பி.டி.பியினருக்கு மக்கள் மத்தி யில் இருந்த எதிர்ப்பைக் கண்டு அந்த அமைப்பில் இருப்பது சரியல்ல என்று உணர்ந்தேன். அதனால்தான் அங்கி ருந்து தப்பி வந்து விடுதலைப் புலி களிடம் சரணடைந்தேன்.

- இவ்வாறு தெரிவித்தார் ஐயம் பிள்ளை யோகராஜா (வயது 34) என்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர். அந்த அமைப்பிலிருந்து தப்பி வந்த இவர் கடந்த வாரம் விடுதலைப் புலிகளி டம் சரணடைந்திருந்தார்.

நேற்றுக் காலை கிளிநொச்சியில புலிகளின் ஊடகத்துறை அலுவலகத் தில் அவர் செய்தியாளர்களைச் சந் தித்து உரையாடினார். அப்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

1988ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல். எவ் அமைப்பினால் கட்டாயமாக இயக் கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தான் இந்திய இராணுவத்தினர் இலங்கை

(18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனை கூட்டமைப்பினர் செவ்வாயன்று சந்தித்துப் பேசுவர்

கிளிநொச்சி,டிசெ.7

தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனு டன் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை கலந்துரையாடவிருக்கின்றனர்.

கிளிநொச்சியில் அன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் இக்கலந் துரையாடலில் முக்கிய பல விட யங்கள் ஆராயப்பட இருக்கின்றன.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடியால் தடைப்பட்டுள்ள சமா தான முயற்சிகளை எவ்வாறு முன் னெடுத்துச் செல்வது என்பது பற்றி யும், அதற்கு கூட்டமைப்பினர் மேற் கொள்ளவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் ஆராயப்படும் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரி வித்தார். (ம-3)

## 15 கோடி ரூபா செலவில் வேலணையில் ஹோட்டல்

### முதலீட்டுச் சபை அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

வேலணையில் நவீன வசதிகளு டன் கூடிய ஹோட்டல் ஒன்றை அமைகக முதலீட்டுச் சபை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

முதலீட்டுச் சபையின் வடக்கு - கிழக்கு திட்ட ஆலோசகர் ரெரன்ஸ் சுந்தரம் இதனைத் தெரிவித்தார்.

வேலணையில் 15 கோடி ரூபா செல வில் 35 அறைகள் கொண்ட மூன்று நட்சத்திர நவீன ஹோட்டல் ஒன்றை அமைக்க தனியார் ஒருவர் முதலீட் டுச் சபையிடம் அங்கீகாரம் கோரியி ருந்தார் என்றும் -

இதற்கான அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதால் விரைவில் ஹோட்டல் அமைக்கும் பணி ஆரம்பமாகும் என் றும் - அவர் தெரிவித்தார்.

பாரிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு முதலீட்டுச் சபையே உதவிகளை வழங்கி வருகின்றது.

சபை யாழ்ப்பாணத்தில் மேற் கொள்ளும் முதலாவது திட்டமாக இந்த ஹோட்டல் அமைக்கும் திட்டம் இருக்கும் என்றும் அவர் மேலும் சொன் னார்.

குடாநாட்டில் பாரிய கைத்தொழில் களை ஆரம்பிப்பது குறித்து ஆராய் வதற்காக எதிர்வரும் 15ஆம் திகதி அவர் யாழ்ப்பாணம் வர இருக்கின் றார். (18ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் பிரதமரையும் கூட்டமைப்பினர் சந்திப்பர்

கொழும்பு,டிசெ.7

அரசுக்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் வாய்ப்புக் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கூட்ட மைப்பினர் அடுத்த வாரம் பேச்சுக் களை நடத்த இருக்கின்றனர்.

ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையில் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ள சந்திப்பை அடுத்து கூட்டமைப்பினருக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெறும்.

விடுதலைப் புலிகளுடன் செவ்வா யன்று தாம் நடத்தும் சந்திப்பில் காணப்படும் முடிவுகள் தொடர்பாக வும் -

சமாதானப் பேச்சுக்களை விரை வாக ஆரம்பிக்கப்படவேண்டிய அவசி யம் தொடர்பாகவும் - பிரதமருக்கு எடுத்துக்கூற இருப்பதாக கூட்டமைப் புப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## புலிகள் - முஸ்லிம்கள் திருமலையில் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடை யிலான சந்திப்பு இன்று திருகோண மலையில் நடைபெறவுள்ளது.

இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் தமி ழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் கலந்து கொள்கிறார்.

இச்சந்திப்பானது முன்னர் இடம் பெற்ற சந்திப்புக்களின் தொடர்ச்சி யாக அமையும் என திருகோண மலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் இச்சந்திப்புக்கள் தடைப்பட்டு இருந் தன. இன்று நடைபெறவுள்ள சந்திப் பில் திருகோணமலையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் அசம்பாவிதங்கள் குறித்து ஆராயப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ம-6)

## ஆலங்கேணி, ஈச்சந்தீவு பகுதிகளில் 6000 தமிழர்கள் முற்றுகை நிலையில்

### அங்கு சென்று பார்த்து வந்த சிவாஜிலிங்கம் எம்.பி. கூறுகிறார்

திருகோணமலை,டிசெ.7

"திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆலங்கேணி, ஈச்சந்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 800 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரம் தமிழர் வெளித் தொடர்புகள் இன்றி முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர். முஸ் லிம்களின் அச்சுறுத்தலே இந்நிலைக் குக் காரணம்."

நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று திரும்பிய தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித் தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## ஹெலி விபத்தில் போலந்து பிரதமர் காயம்

போலந்துப் பிரதமர் லேஸெக் மில்லர் பயணம் செய்த ஹெலி விபத்துக்குள்ளானது. இதில் அவரும் மேலும் 7பேரும் காயமடைந்தனர்.

அவர்கள் சென்றுகொண்டிருந்த ஹெலி இயந்திரக்கோளாறு காரணமாக தலைநகர் வார்ஸா அருகே அவசர அவசரமாகத் தரையிறக்கப் பட்டது. அப்போதே விபத்து நேர்ந்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டதனால் பிரதமர் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வருகின்றார். இதை அவரது மருத்துவர் க்ராஸைனா உறுதிப்படுத்தினார்.

விபத்தில் காயமடைந்ததால் பிரதமர் குறைந்தது ஒரு வாரமாவது மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஹெலியே விபத்துக்குள்ளானது. 1977 ஆம் ஆண்டு முதல் போலந்து விமானப்படையினால் இந்தக் ஹெலி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. (ம)

உலக அரங்கில்

## அல்கெய்டா உறுப்பினருக்கு சவூதியில் பயிற்சி

அமெரிக்காவினால் தேடப்பட்டு வரும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு உறுப்பினர்கள் சவூதிஅரேபியாவில் பயிற்சி பெறும் காட்சிகள் வீடியோ நாடாக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அல்கெய்டா அமைப்பின் இணையத் தளம் ஒன்றில் இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் நாடுகளில் இருந்து கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் விரட்டியடிக்க வேண்டும். அல்லாவுக்காக புனிதப் போரில் இளைஞர்கள் இணையவேண்டும் என்பதை தீவிரமாகப் பரப்பி வருகின்றோம் என அல்கெய்டா உறுப்பினர் ஒருவர் கூறுவதும் அந்த வீடியோ நாடாவில் பதிவாகியுள்ளது. (ம)

## ஜேர்மனியில் ஈராக் பிரஜை கைது!

பேர்லின்,டிசெ.7

ஜேர்மனிக்குள் தீவிரவாதிகளை அழைத்து வந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் ஈராக் பிரஜை ஒருவர் மூனிக்கில் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அன்சார் அல் இஸ்லாம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர் என்று உள்ளூர் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இந்த அமைப்பு ஈராக்கில் இருந்து செயற்படுகின்றது. தற்கொலைப் தாக்குதல் நடத்த இந்த அமைப்பு உறுப்பினர்களைச் சேர்த்து வருவதாக மேற்குலக புலனாய்வாளர்களால் சந்தேகிக்கப்படுகின்றது. (ம)

# ஆப்கானின் தென் பகுதியில் குண்டு வெடித்து 18 பேர் காயம்!

காபூல்,டிசெ.7

ஆப்கானிஸ்தானின் தெற்கு நகரான கந்தகாரில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 18 பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

எந்தக் குழுவும் இந்தக் குண்டு வெடிப்புக்குப் பொறுப்பேற்கவில்லை. ஆனால், இந்தக் குண்டுத் தாக்குதலை தீவரவாதப் போக்குடைய தலிபான்களே செய்திருக்கக்கூடும் என்று உள்ளூர் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

வெளிநாட்டவர்கள் அதிகம் நடமாடும் வர்த்தக நிலையங்கள் அடங்கிய பகுதியிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்த அனைவரும் ஆப்கானியர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். சைக்கிள் ஒன்று கடந்து சென்றபோது குண்டு வெடித்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமையன்று இதே பகுதியில் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

கந்தகாரின் உள்ளூர் நிர்வாகத்துக்குப் பொறுப்பான ஜிர்காவுக்கு தேர்தல் நடைபெறவுள்ள தருணத்தில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளமை மிக முக்கியமானது என்று பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் தலிபான்கள் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்பதற்கான எச்சரிக்கையாக இது இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# தீவிரவாதத் தாக்குதல்களினால் ரஷ்யாவை அச்சுறுத்த முடியாது

## அதிபர் விளாடிமிர் புடின் தெரிவிப்பு

மொஸ்கோ,டிசெ.7

தீவிரவாதத் தாக்குதல்களால் ரஷ்யாவை அச்சுறுத்த முடியாது என்று அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

42 பேரைப் பலிகொண்ட தற்கொலைத் தாக்குதல் ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டதன் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தெற்கு நகரில் பயணிகள் ரயில் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களிலும் காயமடைந்தவர்களிலும் பெரும்பாலானவர்கள் கல்லூரி மாணவர்கள் என்று அதிகாரிகள் கூறினர்.

இந்தத் தாக்குதலின் மூலம் தீவிரவாதிகள் எந்த வெற்றியையும் பெறவில்லை என்றும் அதிபர் புடின் தெரிவித்தார். தாக்குதல்களுக்கு மத்தியிலும் ரஷ்யா தேர்தல்களை நடத்தும் என்றும் அவர் கூறினார்.

ரயில் மீதான தாக்குதலின் எதிரொலி இன்று கூடும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் வலுப்படுத்துமாறு நாடாளுமன்றம் வாக்களிக்கக் கூடும் என்றும் கூறப்படுகின்றது.

செச்சினியத் தீவிரவாதிகளே ரயில் மதான தற்கொலைத் தாக்குதலை நடத்தினார்கள் என்று ரஷ்ய அதிகாரிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். ஆனால், தாம் இந்தத் தாக்குதலை நடத்தவில்லை என்று செச்சினியாவில் பிரிவினைகோரிப் போராடி வரும் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களது இணையத் தளத்தில் இந்த மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது. சாதாரண பொதுமக்களை இலக்குவைத்து நடத்தப்படும் தாக்குதல்களைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



மத்திய கிழக்கில் இரத்தக்களரி தொடர்ந்தவண்ணமே உள்ளது. எகிப்திய எல்லையில் உள்ள ரபா அகதிகள் முகாம் பகுதியில் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பலஸ்தீனர் ஒருவரின் சடலத்தைத் தாண்டிச் செல்கிறது இஸ்ரேலிய டாங்கி ஒன்று.

### கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில்

# அமெ. பாதுகாப்பு அமைச்சர் நேற்று ஈராக்குக்கு விஜயம்

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்று ஈராக்குக்கு ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவரது வருகையையொட்டி அங்கு கடும பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வில்லியம் புஷ் ஈராக்குக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னணியில் ரம்ஸ்பீல்டின் விஜயம் இடம்பெற்றுள்ளது.

காலை உணவு நேரத்துக்கு சற்று முன்பாக ரம்ஸ்பீல்ட், ஈராக்கின் வடக்கிலுள்ள கிர்குக் நகர விமான நிலையத்தில் தரையிறங்கினார்.

ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாமின் ஆதரவாளர்கள் அதிகம் உள்ள இந்த நகரப்பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கப் படையினர் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் சோர்வடைந்திருந்த அமெரிக்கப் படையினருக்கு உற்சாகம் அளிக்கும் விதத்திலேயே ரம்ஸ்பீல்ட் அங்கு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் அங்கு அமெரிக்கப் படையினருடன் காலை உணவருந்தினார்.

ஈராக்கில் தற்போது பாதுகாப்பு நிலைமை முன்னரைவிட முன்னேறியுள்ளது என்று அங்குள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி ரம்ஸ்பீல்டிடம் தெரிவித்தார்.

ஆனாலும், ஈராக்கில் உள்ள அமெரிக்க கூட்டுப் படையினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்துவார்கள் என்று ஈராக்குக்கான அமெரிக்க நிர்வாகி போல் வூமர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் போர் முடிந்துவிட்டது என்று கடந்த மே மாதம் அதிபர் புஷ் அறிவித்த பின்னர் அங்கு இடம்பெற்ற தாக்குதல்களில் இதுவரை 79 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். எனினும், விரைவில் ஈராக்கில் தமது பாதுகாப்பு நிலையைப் பலப்படுத்த முடியும் என்று அமெரிக்கப் படையினர் நம்புகின்றனர்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் ஈராக்குக்கு விஜயம் மேற்கொண்டமை இது மூன்றாவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடமை நேரத்தில் திருமணம் செய்ததால் பதவி இறக்கம்

பக்தாத்,டிசெ.7

ஆக்கிரமிக்கும் இராணுவத்தினர் அப்பகுதிகளில் உள்ளூர் பெண்களைத் திருமணம் முடிப்பது என்பது பேர் இடம்பெறும் பகுதிகளில் நடைபெறும் ஒரு நிகழ்வு. ஈராக்கிலும் அமெரிக்க வீரர் ஒருவர் இத்தகைய காரியத்தைச் செய்யப்போக அது அவருக்கே வில்லங்கத்தில் முடிந்துள்ளது.

பக்தாத்தில் கடமையாற்றி வரும 27 வயதான சீன் பிளாக்வெல் என்ற இராணுவ வீரருக்கு பணியில் இருந்தபோதே திடீரெனத் திருமண ஆசை ஏற்பட்டுள்ளது.

ரோந்துப் பணிக்காகச் சென்றுகொண்டிருந்தபோது திடீரெனமாயமான இவர் யாருக்கும் தெரியாமல் தனது ஈராக்கியக் காதலியை அவசர அவசரமாகத் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

கடமை நேரத்தில் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்துகொண்டமைக்காக அவரது மேலதிகாரிகள் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருக்கின்றனர். அவருக்குப் பதவி இறக்கத்துக்கான உத்தரவு உடனடியாக வழங்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்கப் படையினர் மீது சதாம் ஆதரவுப் படையினர் கடும் தாக்குதல்களை நடத்தி வரும் சூழலில் இந்தத் திருமணம் இடம் பெற்றுள்ளமை மேற்கு நாட்டு பத்திரிகைகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. (ம)

## சிறிய ரக விமானம் வீழ்ந்து நொறுங்கி மூவர் பலி!

பிரிட்டனில் சிறிய ரக விமானம் ஒன்று நேற்று விபத்துக்குள்ளாகி நொறுங்கியதில் மூவர் உயிரிழந்தனர்.

ஒக்ஸ்போர்ட்ஷெயர் அருகே விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு முற்பட்டபோதே விமானம் விபத்துக்குள்ளானது என்று அதிகாரிகள் கூறினர்.

நான்கு ஆசனங்களைக் கொண்ட அந்த விமானத்தில் இருந்த பிரெஞ்சு ஆணும் பெண்ணும் பெல்ஜியம் விமானியும் சம்பவத்தில் உயிரிழந்தனர். (ம)

## மீண்டும் பாம்பு சூப்

கடந்த ஆண்டு சீனாவில் சார்ஸ் நோய் வேகமாகப் பரவியதை அடுத்து அங்கு பாம்பு விற்பனைக்கும் ஏற்றுமதிக்கும் அரசு தடை விதித்தது. சார்ஸ் வேகமாகப் பரவுவதற்கு சீனர்கள் பாம்புகளை உண்பதும் காரணம் என்று தெரிவிக்கப்பட்டதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது சார்ஸ் நோய் அச்சம் நீங்கிவிட்டது. அதனை அடுத்து மீண்டும் பாம்புக் கறி, சூப் என்பன விற்பனைக்கு வந்துள்ளன. (ம)

# உலக அழகிப் பட்டம் அயர்லாந்து அழகிக்கு!

இந்த ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தை அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ரெசானா டேவிசன் என்ற 19 வயது அழகி வென்றுள்ளார்.

கம்யூனிச நாடான சீனா தற்போது வெகுவாக மாறி வருகின்றது. அதன் மிகப் பெரிய வெளிப்பாடாக அங்கு முதன்முறையாக இந்த ஆண்டுக்கான உலக அழகிப் போட்டி நடத்தப்பட்டது.

54 ஆண்டுகாலத் தடையின் பின்னர் சீனாவில் உலக அழகிப் போட்டி நடைபெற்றுள்ளது. ஹைனன் தீவில் உள்ள கலாசார மண்டபத்தில் பெரும் எடுப்பில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. உலகெங்கும் இருந்து 106 நாடுகளின் அழகிகள் இதில் கலந்து கொண்டனர். இவர்களில் 20 பேர் நேறைய இறுதிப் போட்டியில் கலந்து கொண்டனர். அவர்களில் அயர்லாந்து அழகி உலக அழகியாகத் தேர்வானார். இவர் அயர்லாந்து பல்கலைக்கழக மாணவியாவார்.

கடந்த ஆண்டு உலக அழகிப் போட்டி நைஜீரியாவில் இடம்பெற ஏற்பாடாகி இருந்தது. ஆனால், அங்கு இந்தப் போட்டியால் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். இதனை அடுத்து இறுதிப்போட்டி லண்டனுக்கு மாற்றப்பட்டது.

இம்முறை போட்டி திட்டமிட்டபடி மிகச் சிறப்பாக நடைபெற்றது. உலக அழகியைத் தேர்ந்தெடுக்கும் நடுவர் குழுவில் பிரபல அதிரடி நாயகன் ஜாக்கிசானும் இடம்பெற்றிருந்தார்.

உலக அழகியாகத் தேர்வான ரெசானாவுக்கு, கடந்த ஆண்டு உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட துருக்கிய அழகியான அஸ்ரா அகின் ஆயிரத்து 200 கோடி டொலர் பெறுமதியான கிரீடத்தைச் சூட்டினார். அப்போது ரெசானா சந்தோஷ மிகுதியால் உணர்ச்சிவசப்பட்டார்.

உலக அழகிப் பட்டம் வெல்பவர்கள் ஒரு வருடத்துக்கு உலகம் முழுவதும் இலவசமாகப் பயணம் செய்ய முடியும். இது தவிர கோடிக்கணக்கான பணப் பரிசுகளும் கிடைக்கும். அதேநேரம் உலக அழகிப் பட்டம் பெறும்போது அவர்கள் பெற்றிருந்த உடல்வாகுவை அந்த ஒரு வருட காலத்துக்கும் மாற்றமின்றிப் பேண வேண்டும். (ம)



ரெசானா டேவிசன்

| | | | |
|---|---|---|---|
| செவ். | ரா. | சந். | சனி |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| புத. வெ. | சூ. ▲ | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 07.12.2003 - 13.12.2003

### மாற்றம்:

07-12-2003 இல் கார்த்திகை நட்சத்திரம் சந்திரன் இடப இராசியில் நிற்கும்.

சமாதானப் பேச்சுக்கு ஒரு பேச்சு உலகநாடுகளால் திட்டமிடப்படும். நாங்கள் சமாதானம் பேசிக்கொண்டு இருப்போம். நீங்கள் காசைத்தாருங்கோ என்றால் வெளிநாடுகள் தொடந்து அரசுக்கு உதவுமா? எப்படி ஏமாற்றலாம் என்பதை நினைப்பதை விட எப்படிக் கொடுக்கலாம் எனச் சிந்திக்க மனம் இல்லை. அரசியல்வாதிகள் எல்லோரும் தேசியத்தலைவர்களாகவோ, சமாதானப்பிரியர்களாகவோ திடீரென மாறிவிட முடியாது. மக்களைச் சமாதானத்துக்கு வரச்செய்து மக்களுக்காக தியாகம் செய்பவர் யார் என மக்கள் சிந்திப்பார்கள். இந்தியா மெல்லமெல்ல திட்டமிட்டு காய்களை நகர்த்தி உள்ளே வர முயற்சி எடுக்கும். இந்தியாவின் தெற்கு அரசியல்வாதிகள் வடக்கு அரசியல்வாதிகளை வரவேற்று நன்மை பெறுவர். மத்தியகிழக்கில் அரசியல் கொந்தளிப்பு அதிகரிக்கும் தீவிரவாதிகளென மக்கள் அழிக்கப்படுவர். பசுபிக், இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தம், மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு அதிகரிக்குமென கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

ஒருவருக்கு தைரியம், புத்தி சாலித்தனம் ஒன்று சேரும் பொழுது வெற்றிவரும். அது உங்களுக்கு கிடைக்கும் காலமாகும். காசு வரும் நண்பர்கள், மேலதிகாரிகள் உதவுவார்கள். குடும்பக்குதூகலம், பிள்ளைகளுக்கு மாற்றங்கள் கிடைக்கும். தூரத்திலிருந்து நற்செய்திகள்வரும். வீடுமனை சம்பந்தமான அலைச்சல்வரும். கால்விறைப்பு, சளித்தொல்லை கொடுக்கும். பாதுகாப்புப் பகுதி, சந்தைவியாபாரிகள், தோட்டக்காரர்கள் சிறப்பு, இலாபம் அடைவார்கள். தந்தைக்கோ தந்தை வழியினருக்கோ நல்லதல்ல. பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியா, வெள்ளி, சனி*

### இடபம்

அரசியல்வாதிகள் தற்காலம் சஞ்சலப்படுவார்கள். கட்சி மாறுவார்கள். அதேபோன்று நீங்களும் மனக்கலக்கம் அடைவீர்கள் வாக்குக் கலக்கம் ஏற்படும். பணவரவு இருந்தாலும் போதிய இலாபம் கிடைக்காது. 7இல் சூரியன் அடிக்கடி பதற்றத்தைத்தரும். நண்பர்கள், குடும்பத்தவர்களின் உதவியற்ற நிலையும் தோன்றும். வெளிநாட்டுச் செய்தி மகிழ்ச்சி தரும். நெஞ்சுநோ, சளித்தொல்லை கொடுக்கும். மருந்து, பாதுகாப்பு, வியாபாரம் போன்ற தொழில் செய்பவர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியா, வெள்ளி, சனி*

### மிதுனம்

அதிக கற்பனை, அதிக பொறுப்புகள் மனத்துன்பம் கொடுக்கும். பொருள்வரவு தாமதமாகும். குடும்பமனச் சஞ்சலத்தை அடிக்கடி புதனும், வெள்ளியும் சனிபார்வை பெற்றிருப்பதனால் கொடுக்கும். ஒரு சில நண்பர்கள் குறை சொல்லித்திரிவார்கள். 'கைக்கு வந்தது வாய்க்கு எட்டாத நிலை' வரும். காணி பூமி, வாகன வசதிகள் வரும். நாரிப்பிடிப்பு, சளித்தொல்லை, கைகால் விறைப்பு, பொருள் இழப்பு வரஇடம் உண்டு. வியாபாரிகள், தோட்டக்காரர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியா, வெள்ளி, சனி*

### கடகம்

ஆசை வருவது எப்பொழுது என நியாயப்படுத்த முடியாது. ஆசைப்பட்டதை எல்லாம் எல்லோரும் அடைய முடியாது. எனவே, கிடைக்காது என இருந்தால் எட்டிப் போய்விடுங்கள். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். பொருள்வரவு ஏற்படும். உறவினர் உதவி, காரியங்கள் மந்த நிலையடையும். இடமாற்றங்கள் நல்லதல்ல. கொடுத்தது வராது. பிரச்சினை, மனச்சஞ்சலம் கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்கள் இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியா, வெள்ளி, சனி*

### சிங்கம்

உங்கள் கவனக்குறைவால் தொழில் ஸ்தானத்தில் குறை கேட்பீர்கள். இடமாற்றம் கொடுக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். பிறருக்கு உதவிகள் செய்து புகழடைவீர்கள். வீடுமனை வாகனச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினருக்கு உடல் நலக்குறைவு, வைத்தியச் செலவுகள் கொடுக்கும். பொருள்கள் தவறலாம். தூரப்பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். குருத்தொழில், வியாபாரத் தொழில், தோட்டத்தொழில் செய்பவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியா, வெள்ளி, சனி*

### கன்னி

எல்லாம் மனதைப் பொறுத்தது எனப்பொதுவாகச் சொன்னாலும், விதிக்கிரகமான சனி 10இல் நிற்பதனால் தொழில் ஸ்தானத்தில் மனக்குழப்பம் - மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்படத்தான் செய்யும். சரி, பிழையைச் சமப்படுத்தி சாந்தி அடையுங்கள். வியாபாரிகள் புதிய முறையில் வருமானம் பெறுவர். இடமாற்றங்கள் நன்மை தரும். மாமன், மாமி, சின்னம்மா, பெரியம்மாவுக்கு உடல் நிலை பாதிப்புக்கள் கொடுக்கும். பொருள் தவறலாம். கோவிப்பீர்கள். பொருள்வரவு கொடுக்கும். முழங்கால் நோ, சளி கொடுக்கும். வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியா, வெள்ளி, சனி*

### துலாம்

சட்டப்படி எதுதான் நடக்கின்றது? எல்லாம் முகமன் பார்த்தும் நடக்கின்றது எனச் சொல்ல முடியாது. திரும்பிப் பாராது தொடர்ந்து நடந்து முடியுங்கள். தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை வரும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். வருமானம் அதிகரிக்கும். வசீகரப்பேச்சு, வீடுவாசலால் செலவுகள் அதிகரித்தல், மனைவியுடன் தர்க்கம், புத்திரரால் சிறப்பு, முழங்கால், நாரி உளைவு, பித்தம் அதிகரித்து உடல் நிலை பாதிப்புவரும். சட்டத்தரணிகள், வியாபாரிகள், ஆசிரியர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிக்க புதிய உத்திகளை பாவித்துப்பலன் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியா, வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

எந்த விடயத்திலும் ஒரு தெளிவு, திட்டத்தை வகுத்து படிப்படியாக முன்னேற்றப்பாதையில் செல்ல முனைவீர்கள். அசுர சக்தி போன்று திடீரெனப் பிறருடன் மோதிக்கொள்ளுவீர்கள். உதயத்தில் ஆதவன் நிற்பதனால் பிறருக்கு உதவிகளைச் செய்தபடி இருப்பீர்கள். தொழில் விஷயத்தில் தீவிரமாக இருப்பீர்கள். உங்களை விசாரிக்க அதிகாரிகள், இனஜனங்கள் வருவார்கள். உடல்நிலை காய்ச்சல், கிருமித்தாக்கம், கொடுக்க இடம் உண்டு. தெய்வபக்தியால் நன்மைகள் ஏற்படும். கால் வருத்தம் பொருள் இழப்பு ஏற்படலாம். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியா, வெள்ளி, சனி.*

### தனுசு

பிள்ளைக்காக சேர்த்த பொருளைக் கொண்டு, பிள்ளையையே ஆளைவைத்து அடித்து முறிப்பவர்கள், அவதிப்படுவார்கள். இடமாற்றங்கள் கொடுக்கும். தூரத்திலிருந்து செய்திகள் வரும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் ஏற்படும். முதுகு, கால்வலி அதிகரிக்கும். இனஜனங்கள் உங்கள் உதவிகள் கேட்டுவருவார்கள். வாய்வுத் தொல்லை, உஷ்ண பீடைகள் வரஇடம் உண்டு. பழைய வலிகள் வரலாம். குருத்தொழில், வைத்தியத்துறை, வியாபாரிகளுக்கு நன்மை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், ஞாயிறு, புதன், வியா, வெள்ளி, சனி.*

### மகரம்

சகோதரங்களுக்கு ஒரு விடிவு ஏற்படும். வீடுமனையில் மாற்றங்கள் ஏற்படும் முழங்கால் வருத்தங்கள் கொடுக்கும். நாரி உளைவு கொடுக்கும். வைத்தியச்செலவுகள் கொடுக்கும். போக்குவரத்துச் செலவுகள், வீட்டில் குடும்பத்தினரின் வைத்தியச்செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். பொருள் தவறலாம், தூரத்து இடங்களிலிருந்து நண்பர்கள வருவர். பிறருக்கு உதவிசெய்து சிறப்பு அடைவீர்கள். வியாபாரிகள் ஆராய்ச்சியாளர்கள், நிர்வாகத்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியா, வெள்ளி, சனி.*

### கும்பம்

தொழில் ஸ்தானத்தில் பல திட்டங்கள் உருவாகி, அதற்காக நீங்கள் போராடுவீர்கள். நெஞ்சில் நோ, அதிகயோசனை வந்து போகும். வருமானம் வரும் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். முழங்கால் உளைவு, சளித்தொல்லை கொடுக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் வரும். கொடுத்ததை வாங்க முடியாதநிலை ஏற்படும். மாமன், சகோதரமுறையினர் வர இடமுண்டு. சட்டத்துறையினர்கள், வியாபாரிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியா, சனி.*

### மீனம்

முயற்சிக்குத் தகுந்த வருமானம் அதிகரிக்கும். இடமாற்றங்கள் கொடுக்கலாம். மேலதிகாரிகள் பகைப்பர். கால் வருத்தம், நாரி உளைவு சலவருத்தம் கொடுக்கும். புதிய பொறுப்புக்களால் அலைச்சல் வரும். இடமாற்றங்கள் நன்மை தரும். எடுத்தெறிந்து பேசாதீர்கள். அதனால், இழப்புக்கள் வரலாம். வீடுமனையில் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். வைத்தியர்கள், ஆசிரியர்கள், மருந்து வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியா, சனி.*

**மகாதேவர் ஜோதிடம்**

---

மலேரியா ஒழிப்பில் முதற்கட்டமாக

## குடம்பி மீன்வளர்ப்பு தொட்டி உடுவிலில் இன்று திறந்து வைப்பு

வலிகாமம்தெற்கு,டிசெ.7

உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில், மலேரியா நோயை ஒழிக்கும் நோக்குடன் கட்டப்பட்ட குடம்பி மீன் வளர்ப்புத் தொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

வத்தளை லயன்ஸ் கழகமும், சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து கட்டிய இத்தொட்டியை லயன்ஸ் கழக யாழ்ப்பாண மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.சிவானந்தம் திறந்து வைப்பார்.

அதனைத் தொடர்ந்து சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் நடைபெறவுள்ள நுளம்பு ஒழித்தல் தொடர்பான கருத்தரங்கில் மாவட்ட உதவி ஆணையாளர் கலந்துகொண்டு பயனாளிகள் பலருக்கு நுளம்பு வலைகளை வழங்கவுள்ளார்.

அன்று மாலை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர கல்லூரியில் நடைபெறும் விழாவிலும் மாவட்ட உதவி ஆணையாளர் கலந்துகொண்டு அன்பளிப்புப் பொருள்களை வழங்குவார். (ஐ-152)

### மலசலகூடம் கட்ட உதவி

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலைய எல்லைக்குள் இருக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 50 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைப்பதற்கான பொருள்களை இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு அண்மையில் வழங்கி உள்ளது என நிலையத்தின் தலைவர் எஸ்.விக்கிரமராஜன் தெரிவித்துள்ளார். (ஓ-75)

### மல்லாகத்தில் நாளை மருத்துவ முகாம்

உலக சுகாதார தினத்தினை முன்னிட்டு, மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள இலவச மருத்துவமுகாம் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஒருமணி வரை மல்லாகம் அர்ச்சனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளின் வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டு சிகிச்சைகளை வழங்கவுள்ளனர். தொடர்ந்து சலரோகம், இரத்த அழுத்தம், இருதயக் கோளாறு பற்றிய கருத்தரங்குகளும் நடத்தப்படும். (எ-150)

### சமய தீட்சை

சுழிபுரம்,டிசெ.7

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சு.சுந்தரராசக்குருக்கள் தீட்சை வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். (எ-28)

---

நிர்வாக இழுபறியால் மூடிக்கிடந்த

## சங்கிலியன் சனசமூக நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்கியது

யாழ்ப்பாணம்,டிசெ.7

நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையம் மீண்டும் செயற்படத தொடங்கியுள்ளது.

இரண்டு குழுவினருக்கு இடையே நிர்வாகம் தொடர்பாக ஏற்பட்ட இழுபறி காரணமாக சுமார் ஏழு ஆண்டு காலமாக இயங்காமல் இருந்து வந்த இந்த சனசமூக நிலையத்துக்கு, அண்மையில் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் யாழ் நல்லூர் கோட்ட அரசியல்துறையினர் தலையிட்டு நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்தே புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

நிலையத்தின் தலைவராக சு.பிரேமதாசனும் செயலாளராக பிரம்மஸ்ரீ சௌ சசிகுமார சர்மாவும், பொருளாளராக வெ.சதீஸ்பாபுவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அண்மையில் இந்த சனசமூக நிலையத்தில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் அஞ்சலிக்கூட்டமும் நடைபெற்றன. (ஐ-86)

### கூரைவிரிப்புகள் அன்பளிப்பு

வலி.தெற்கு,டிசெ.7

உடுவில் சபாபதிப்பிள்ளை நலன்புரிநிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் கூரைவிரிப்புகள் அண்மையில் வழங்கப்பட்டன.

ஏ-9 வீதியூடாக வன்னியில் இருந்து வந்து நலன்புரி நிலையத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-10-152)

---

பெரியோர்களே!

நோய்வாய்ப்பட்ட சிறுவர்களின் மேலதிக சிகிச்சையின் ஒரு பகுதிச் செலவை

நிலையான வைப்பின் வட்டி மூலம் வழங்குவதே எமது நோக்கமாகும்.

உங்கள் ஆதரவு அதற்குத் தேவை.

அரும்புகள் சிறுவர் நிதியம்

மருத்துவ மாணவர் ஒன்றியம்

☎021-222-7342, 0777-678051

MEDICAL STUDENTS UNION

## விற்பனையாளர்கள்/கணக்காளர்கள்

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்குகின்ற பான்ஸிக் கடைக்கு

1. விற்பனையாளர்கள்.
2. கணக்காளர்கள்.

தேவைப்படுகின்றனர். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயவிவரங்களுடன் 12.12.2003 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.2110,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(34-11-18-25) (25379)


## பதினாறாவது ஆண்டு நினைவு நாள்

மலர்வு 12 - 09 - 1928



உதிர்வு 07 - 12 - 1987

**அமரர் வே.த.தணிகாசலம் (அதிபர்)**

(குருமாமணி)

பாரினில் நாம் சிறக்க
பகலிரவாய் கண் விழித்து
பரமன் பாதம் தன்னை
பாங்குடனே தினம் துதித்து
கண் துஞ்சாமல் பார்த்து
கண்மணியாய் எமைக்காத்து
பார் போற்றும் உத்தமராய்
வாழவைத்த உமை என்றுமே மறவோம்.

"இராஜஸ்தலம்"
அல்வாய்.

உங்கள் பாசத்துடன் நினைவுகூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
(C/31668)(35-11-18-25) பேரப்பிள்ளைகள்.

## மிதிவெடி கருத்தரங்கு

வலி.தெற்கு,டிசெ.7

சர்வோதயத்தின் மிதிவெடி அபாயக் கல்வித்திட்டத்தின் கீழ் "யூனிசெவ்" நிறுவன அனுசரணையுடன் சர்வோதய இயக்கத்தினரால் நடத்தப்படவுள்ள மிதிவெடி தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-[illegible])

## திருமுறைப்பாராயணம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிருதிருமுறைப்பாராயணம் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மன்ற உபதலைவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் கொழும்புத்துறை புங்கங்குளம் வீதியில் உள்ள ஸ்ரீ காயத்திரி பீட கமலா பெண்கள் ஆச்சிரமத்தியில் நடைபெறவுள்ளது.

(எ)

## பேராதனை வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.7

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைகள் அலகு நடத்தும் பொதுக் கலைமாணிப் பட்டப் பரீட்சைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளில் தோற்றுவோருக்கான நேர அட்டவணை உட்பட விவரங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அக்கடிதங்கள் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் கிளை பிரதிப் பதிவாளருடன் 081 - 2388057, 2388 786, 2388787 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளுமாறு பேராதனைப் பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

(ஒ-5)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி
கமலேஸ்வரன் டிலக்ஸ்நவி
07-12-2003

HAPPY



BIRTHDAY

மீசாலை மேற்கில் வசிக்கும்
திரு. திருமதி கமலேஸ்வரன் - தர்ஷா தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி

**டிலக்ஸ்நவி**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (07.12.2003) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பான அப்பா, அம்மா, ஆசையக்கா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, மேகன் சித்தப்பா, ராசன் பெரியப்பா, இத்தாலியில் வசிக்கும் ஆசைமாமா (தஜீபன்), சின்ன அம்மம்மா, அம்மப்பா, சத்தியாச்சித்தி, சரண்யாச்சித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சீரோடுஞ் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
மீசாலை மேற்கு. க.குணபாலசிங்கம் (அம்மப்பா),
மீசாலை (25171)(34-11-25) கு.பூவா (அம்மம்மா).


## கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

எமது நிறுவன நிர்வாக முகாமையாளர்
திரு.ந.சிவபாலன் அவர்களின் பாசம் நிறைந்த தாயார்
**திருமதி நடராஜா புவனேஸ்வரி**
அவர்கள் 05.12.2003அன்று இறைபதம் அடைந்ததையிட்டு
ஆழ்ந்த வேதனை அடைவதோடு
அவரது ஆத்மா சாந்தி அடைய
பொன்னாலைக் கண்ணனின் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி

உரிமையாளரும் ஊழியர்களும்
ஸ்ரீவரதராஜா வெதுப்பகம்
தொல்புரம்,சுழிபுரம்.
(25507)(35-11-25)

## துயர் பகிர்கின்றோம்



எமது ஆராய்ச்சிக் கழக உறுப்பினரும்
சோதிட ஆசிரியருமாகிய
**பொன்னையா இரத்தினம்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் அடைகின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயரில் வாழும் அவரது மனைவி, பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களின் துயரத்தில் பங்கு கொள்வதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குளப்பிட்டி ஒழுங்கை,
வைரவர்கோயிலடி,
கொக்குவில். (25345)(35-11-25)

ஆ.சண்முகலிங்கம்
தலைவர்,
தமிழர் சோதிட ஆராய்ச்சிக் கழகம்


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## 2004 ஆம் ஆண்டுக்கான

## மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2004.01.01 ஆம் திகதி முதல் 2004.12.31 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| இல. சந்தைகள். இறைச்சிக்கடைகள். கருவாட்டுக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01. சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 750.00 | 7500.00 | 2664000.00 | - |
| 02. உடுவில் கீளிச்சந்தை | 200.00 | 1500.00 | 56000.00 | - |
| 03. உடுவில் ஆலடிச் சந்தை | 200.00 | 500.00 | 5000.00 | - |
| 04. சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 300.00 | 2500.00 | 798200.00 | 100.00 |
| 05. கருவாட்டுக்கடை இல. 05 | 100.00 | 500.00 | 11500.00 | 60.00 |
| உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01. மருதனார் மடம் பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 750.00 | 7500.00 | 2440000.00 | - |
| 02. இணுவில் பொதுச்சந்தை | 200.00 | 2000.00 | 39800.00 | - |
| 03. தாவடி ஆட்டிறைச்சிக்கடை | 200.00 | 2000.00 | 36800.00 | - |
| ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 01. ஏழாலை சந்தை | 150.00 | 1500.00 | 12650.00 | - |

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித்திகதி : 2003.12.18 பி.ப. 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2003.12.19. ந.ப. 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2003.12.19. பி.ப. 2.00 மணிக்கு

குத்தகைகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு, பிரதேசசபை,
சுன்னாகம்.
2003.12.05
(சி-31748) (25-11-18)

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் 17 - 11 - 1950



விண்ணகம் 17 - 12 - 2002

அமரர்
**ஐயாத்துரை குகநேசன் (கண்ணன்)**
அமரத்துவ தினம் மார்கழி கார்த்திகை
திதி: 07-12-2003

எமது இல்லத்தலைவனாயிருந்து எம்மை மனந்தளராமல்
பாதுகாத்து வேண்டிய வேண்டிய தேவைகளையெல்லாம்
ஒருகுறைவுமில்லாமல் தந்து 17.12.2002 இல் கொழும்பு ஐஞ்சுலாம்படிச்
சந்தியில் நிகழ்ந்த தீவிபத்தில் அகால மரணமடைந்த
எமது குடும்பத் தெய்வம் அமரர் ஐ. குகநேசன அவர்களை
நினைவு கூர்ந்து பிரார்த்திக்கிறோம்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (25510) (26-11-18-25)

பிரிவால் துயர்படும்:
மனைவி, மக்கள்.

உதயன்

## தற்கொலைத் தாக்குதல்கள்: வல்லரசுகளே பொறுப்பு

உலக நாடுகளில் அண்மைக்காலத்தில் தற்கொலைத் தாக்குதல்கள் திடீரென அதிகரித்துவிட்டன.

குறைந்தது ஒன்று விட்டு ஒரு நாளுக்கு ஒரு தற்கொலைத் தாக்குதல் என்ற வீதத்தில் இவை இடம் பெறுகின்றன. இந்த வரிசையில் கடந்த வெள்ளியன்று ரஷ்யாவில் பயணிகள் ரயிலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் நாற்பது பேர்வரை பலியாகியுள்ளன்; நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

ஆரம்பத்தில் இஸ்ரேல் உட்பட மத்திய கிழக்கிலும் வேறு சில இடங்களிலும் மட்டும் இடம்பெற்றுவந்த இத்தகைய தாக்குதல்கள் இப்போது பூகோளப் பந்தில் பல இடங்களுக்கும் - பல நாடுகளுக்கும் - பரவிவிட்டன.

அது மட்டுமல்லாமல், இராணுவ இலக்குகள் மாத்திரமல்லாமல், பொது இடங்கள் - பொது மக்கள் கூடும் மையங்கள் - கூட, இத்தகைய தாக்குதல்களுக்கு இலக்காகுவதுதான் வேதனை, யுத்தத்திலோ, பிணக்கிலோ அல்லது அரசியல் முடிவுகளை எடுப்பதிலோ சம்பந்தப்படாத பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் இத்தகைய தாக்குதலில் உயிரிழப்பதும், அங்கவீனமாவதும், படுகாயமுறுவதுமே எல்லோர் மனதையும் அதிகம் நெருட வைக்கின்றது.

சர்வதேச ரீதியில் மனித நேயம் இத்துணை அளவுக்கு கீழிறங்கிச் சென்றதற்கு யார் காரணம்? இதிலிருந்து உலகு மீட்சி பெறுவது எப்படி? - இவைதான் பலரின் மனதிலும் எழும் கேள்விகள்.

வெளிப்பார்வைக்கு அநாகரிகமாகத் தோற்றுகின்ற இத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைக்கு உலகம் சென்றதற்கு வல்லரசுகளே பொறுப்பேற்க வேண்டும். அவையே - ஐயம் திரிபற - குற்றவாளிகள்.

தங்களுடைய வல்லாதிக்க சக்தியை மேலும் மேலும் வலுப்படுத்தி, பூகோளப்பந்தில் தமது ஆதிக்கத்தை விஸ்தரிக்கச் செய்வதற்கான செயற்பாடுகளில் மட்டும் கண்ணுங்கருத்துமாக - கவனமாக - சிரத்தையாக - அக்கறையாக இருக்கின்ற வல்லரசுகள், அதற்கு மறுபக்கத்தில் உலகில் உள்ள பல்வேறு இனங்களின் அடிப்படை உரிமைகள், நியாயமான அபிலாஷைகள் ஆகியவை குறித்து சிந்திப்பதேயில்லை. மாறாக, அவற்றை மதிக்கும் பல்வேறு இனங்களை அடக்கி ஒடுக்கியும் செயற்படும் சக்திகளுக்கு பக்கபலமாக நின்றதன் மூலம், தேசிய இனங்களுக்கு எதிரான பெரும் அடக்குமுறைகளுக்கு அவை காரணமாயின; துணை போயின.

சர்வதேச ரீதியில் தங்களின் ஆதிக்கப் போக்கு பச்சைக்கொடி காட்டும் பல்வேறு அரசுத் தலைமைகளுக்குத் துணையாயிருந்து - அவற்றுக்குப் பக்கபலம் வழங்கிய - வல்லரசுகள், அவ்வாறு தாம் முண்டு கொடுக்கும் அரசுத் தலைமைகள் தத்தமது நாட்டில் தேசிய இனங்களுக்கு எதிரான எதேச்சாதிகாரப் போக்கைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதை கண்டும் காணாமல் இருக்கின்றன; அல்லது அத்தகைய எதேச்சாதிகாரப் போக்கை ஆதரித்து ஊக்கப்படுத்துகின்றன; சில சமயங்களில் பிற இறைமையுள்ள நாடுகளின் மீது தாங்களே நேரடியாகத் தலையிட்டு, தங்களின் இராணுவ வல்லாதிக்கத்தைப் பயன்படுத்தி அவற்றைத் தமக்குக் கீழ் அடிமை நாடுகளாக்கின.

பலஸ்தீனத்தில் இஸ்ரேல் புரியும் எதேச்சாதிகாரத்துக்கு அமெரிக்கா முண்டு கொடுப்பதும் -

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா தானே தனது வல்லாதிக்கத்தைப் பயன்படுத்தியதும் - பயன்படுத்துவதும் -

செச்சனியாவை ரஷ்யா அடக்கித் தனது ஆளுகைக்குள் வைத்திருப்பதும் -

இந்த வகைப் பட்டியலுக்குள் அடங்குகின்ற சில விடயங்களே.

- இவ்வாறு உலக வல்லாதிக்க சக்திகளின் கபளீகரப் போக்கால் தங்கள் தனித்துவத்தையும், உரிமைகளையும் ஏன் வாழ்வியலுக்கான இருப்பையும் கூட - இழந்து தவிக்கும் தேசங்கள், தேசிய இனங்கள் - இத்தகைய அடக்குமுறையிலிருந்து வெளிப்படுவதற்கான தமது நியாயமான அபிலாஷைகளை வெளிப்படுத்துகின்றன; அதற்காகக் குரல் கொடுக்கின்றன. அதனை எட்டுவதற்காக செயற்பட முனைகின்றன; போராடவும் தயாராகின்றன.

ஆனால், அதற்கு எதிரான வல்லரசுகளும் வல்லாதிக்க சக்திகளும் நியாயமான அபிலாஷைகளை எட்டுவதற்கான அந்தத் தேசிய இனங்களின் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சித்திரிக்கின்றன. அதற்கு எதிராகத் தங்களுக்குள் ஐக்கியமாகி, தேசிய இனங்களின் உண்மையான விடுதலை போக்கை சர்வதேச பயங்கரவாதம் என்று முழங்கி அதற்கு எதிராகக் கூட்டு நடவடிக்கை எடுக்கின்றன. மேலும் அடக்குகின்றன.

அத்தகைய வல்லாதிக்க சக்திகளின் சர்வதேச ரீதியான அடக்குமுறை வலைக்குள் சிக்கும் தேசிய இனங்கள், தாங்கள் விடுதலைக்கு வேறுவழியின்றி, இத்தகைய தற்கொலைத் தாக்குதல் வழிகளை நாடுகின்றன.

எனவே, மொத்தத்தில் இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களை உருவாக்கும் காரணகர்த்தர்களாக வல்லரசுகளே இருப்பது தெளிவாகின்றது.

அவை தம்மைத் திருத்திக்கொள்ளாத வரை இத்தகைய தற்கொலைத் தாக்குதல்கள் நிறுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும்.

# ஜெய்ப்பூர் நிறுவனத் தயாரிப்புகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.7

ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுவரும் செயற்கை அவயவங்கள் மற்றும் வலுவிழந்தோருக்கான துணைச்சாதனங்களை நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்தி-அவற்றின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி தி.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது தமது நிறுவனத்தின் தயாரிப்புக்களில் இருவகையான தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'பற்றறி'யில் இயங்கும் மூன்று சில்லு சைக்கிள் வகை ஒன்றை எமது நிறுவனம் தயாரித்திருக்கின்றது.

முற்றிலும் நவீன தொழில் நுட்ப முறையில் வடிவமைக்கப்பட்ட மேற்படி சைக்கிள் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் பாவனையாளர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இப்பொழுது செயற்கை அவயவங்களை மட்டுமன்றி வலுவிழந்தோர் துணைச்சாதனங்களான முச்சக்கர வண்டி, சக்கரநாற்காலி, நடைதாங்கி போன்றவற்றையும் உற்பத்தி செய்துவருகின்றது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டு வரும் செயற்கை அவயவங்கள் மற்றும் துணைச் சாதனங்களை மேலும் நவீன தொழில நுட்பங்களை உள்ளடக்கிய முறையில் வடிவமைப்பதற்கு எமது நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்கென கம்போடியா,லண்டன் போன்ற நாடுகளைச் சேர்ந்த துறை சார்ந்த நிபுணர்கள் மூவர் அண்மையில் இங்கு வருகை தந்துள்ளனர்.

இங்கு மேற்கொள்ளப்படும் உற்பத்திகளை நவீன தொழில் நுட்பமுறைகளில் வடிவமைப்பதற்குரிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

அத்துடன், இங்கு ஏற்கனவே இருந்த தொழில் நுட்பவியலாளர்களுக்கு விசேட பயிற்சிகளையும் அவர்கள் வழங்கி வருகின்றனர்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தில் பணியாற்றிய மூவர் மேலதிக நவீன தொழில்நுட்பவியல் கற்கைளை மேற்கொள்வதற்காக வியட்நாம், இந்தியா, தான்சானியா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்கள் பயிற்சிகளை முடித்து இங்கு திரும்பி வந்ததும் செயற்கை அவயவங்கள் மற்றும் துணைச் சாதனங்களின் தரத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய முடியும்-என்று தெரிவித்தார்.(எ-4)

### வேலைவாய்ப்பு வழங்கக் கோரி

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் புதனன்று மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் எதிர்வரும் 10ஆம் திகதியன்று யாழ்.வலயக் கல்வி அலுவலகம் முன்பாக அடையாள மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

2000ஆம், 2001ஆம் மற்றும் 2002ஆம் ஆண்டுகளில் யாழ்.பல்கலைக்கழகத்தில் பயின்றுவெளியேறியுள்ள 140 உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியே இந்த அடையாள மறியற் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள அரச தமிழ்மொழி பாடசாலைகளில் 300இற்கும் மேற்பட்ட உடறகல்வி ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதனையும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. தமது அடையாள மறியல் போராட்டம் தொடர்பாக வடக்கு - கிழக்கிலுள்ள கல்வி உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் எடுக்க வேண்டும் என்றும் - உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது கோரிக்கை தொடர்பில் சாதகமான பதில் எதுவும் வழங்கப்படாதவிடத்து அடையாளப் போராட்டம் மறியற்போராட்டமாக விஸ்தரிக்கப்படும் எனவும் சங்கம் எச்சரித்துள்ளது.(எ-9)

# பயிர் நாற்றுகள் உற்பத்தி மண்டைதீவில் அமோகம்

### ஆனால் நெற்செய்கை பின்னடைவு

மண்டைதீவு,டிசெ.7

மண்டைதீவில் இடம்பெயர்வின் பின்னர் கைவிடப்பட்ட பயிர்நாற்றுகளின் உற்பத்தி மீண்டும் முழுவேகத்தில் இடம்பெறுகிறது. புகையிலை, மிளகாய் போன்ற பயிர்களின் நாற்று நடுகைக்கு உகந்த நிலையில் தயார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்கள் தீவகத்தில் ஏனைய பகுதிகளிலிருந்தும் தென்மராட்சியின் கைதடி, நாவற்குழி மற்றும் வடமராட்சியில் இருந்தும் வரும் விவசாயிகளால் கொள்வனவு செய்யப்பட்டு நடுகை செய்யப்பட்டு வந்துள்ளன.

இடப்பெயர்வின் பின் நாற்று உற்பத்தியில் தொய்வு நிலை ஏற்பட்டிருந்தது. ஆயினும், இந்த வருடம் போதிய நாற்றுக்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

இதேசமயம் நெல்வயல்கள் பல வருடங்களாகப் பயிரிடாது பாழ் அடைந்தே காணப்படுகின்றன. கோரை பற்றிப்படர்ந்திருக்கும் இந்த வயல்களில் களையகற்றுவதற்கு பெருமளவு பணம் தேவைப்படுவதும் கட்டாக்காலிகளின் தொல்லையும், கடல் நீர் வயல் நிலங்களுள் மாரி காலத்தில் உட்புகுவதால் உவராகி வருவதும் மண்டைதீவின் நெற்செய்கைக்குப் பெரும சவாலாக உள்ளன. (ஒ-83)

**நாளை**

கார்த்திகை 22
திங்கட்கிழமை
(08.12.2003)
திதி : பூரணை
பின்னிரவு 2.18 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பின்னிரவு 4.54 வரை.
சுபநேரம்: 12.17-1.47
ராகுகாலம்: 7.47-9.17
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இதுதான் நம் வாழ்வின் கடைசித்தினம் என்ற உணர்ச்சியுடன் ஒவ்வொரு நாளையும் நாம் மிக்க பயனுடையதாகச் செலவிட வேண்டும்.

# சிறுவர் இல்ல சிறார்களுக்கான விசேட ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.7

சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கான விசேட ஒன்றுகூடல் நிகழ்வொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை, யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வு காலை 9 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுவின் இணைத்தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமார் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

'மீனா' என்ற சிறுமி தொடர்பாக மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரம் ஒன்றை பிரசுரித்து வருகிறது. இந்தச் சிறுமி யார் என்பது தொடர்பான தகவல்கள் அன்றைய ஒன்றுகூடலின் போது வெளிப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனாவை அறிமுகஞ் செய்யும் 13 பகுதிகள் அடங்கிய 3 மணிநேர விவரணச்சித்திரம் ஒன்றும் அங்கு காண்பிக்கப்படவுள்ளது.

"யுனிசெப்" அமைப்பால் தயாரிக்கப்பட்ட காட்டூன் சித்திரப் படத் தொடரின் வசீகரமான கதாநாயகியே மீனா. ஒவ்வொரு பிள்ளையையும் சிந்திக்க வைத்து வாழ்க்கைப் பிரச்சினைக்கு பரிகாரம் காண வழிசெய்வாள் அவள் - என்று மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் அதிகாரி ஸ்ரீபன் தெரிவித்தார்.(எ-9)

# கூரையைப் பிரித்து இறங்கி சைக்கிள் கடையில் திருட்டு

### பண்டத்தரிப்பில் சம்பவம்

நள்ளிரவு வேளையில் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றினுள் கூரை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு திருத்துவதற்கென நிறுத்தப்பட்டிருந்த "சொப்பர்" சைக்கிள் ஒன்றையும் சைக்கிள் உதிரிப்பாகங்களையும், இரண்டு பெற்றோமக்ஸ் ஆகியன உட்பட மற்றும் பல்வேறு பொருள்களையும் திருடிச் சென்ற சம்பவம் பண்டத்தரிப்பில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

பண்டத்தரிப்பு,சித்தன்கேணி வீதியில், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு சமீபமாகவுள்ள மேற்படி கடையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இத்திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தக்கடைக்கு அருகில் உள்ள மற்றுமொரு கடையிலிருந்தும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட திருட்டு தொடர்பாக மேற்படி சைக்கிள் கடை உரிமையாளர் இளவாலைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போனதாக இவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (எ-135)





## யார் இந்த மீனா?

- ★ வளரும் பெண் பிள்ளைகளுக்கும் வளரும் ஆண்பிள்ளைகளைப் போன்றே போஷாக்குத் தேவைகள் உள்ளன.
- ★ ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படும் உணவின் அளவு, தரம் ஆகியவற்றில் பாரபட்சம் காட்டலாகாது.
- ★ அதிகமான பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகள் செய்யும் வேலைகளிலும் பார்க்கக் கூடிய அளவு வீட்டுவேலைகளைச் செய்கின்றனர்.
- ★ வீட்டுவேலைகளைச் செய்வதற்கு ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளுக்கு உதவுதல் வேண்டும்.
- ★ நல்ல போஷாக்குக்கும் அதன் கூறுகளான உணவு, சுகாதாரம், பராமரிப்பு ஆகியவற்றிற்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் உரிமை உண்டு.

பிள்ளைகள் தமது உச்ச உடல், உள, உணர்ச்சி, வளர்ச்சிக்கு போதிய அளவு உணவு உண்ண வேண்டும்.

அத்துடன் நிறை போஷாக்கை கொடுக்க தேவைப்படும் உணவு வகைகளை உண்ணுதல் வேண்டும்.



அனுசரணை: unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-3736-11-13)

## JAFFNA CELLULAR

அங்கீகரிக்கப்பட்ட Mobitel உப முகவர்

Mobitel G.S.M

யாழ். மக்களுக்கு ஒரு நற்செய்தி!

**Mobitel Edge தொழில்நுட்பத்துடன் கூடிய G.S.Mஇன் சேவை உங்கள் கைகளில்**

✳ வியக்க வைக்கும் நலன்களைப் பெற

✳ சுலபமான வழிகளை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

**Mobitel G.S.M இன் விசேட பொதிகள்**

100/- 300/- 500/- 1100/-

உங்கள் தெரிவுக்கு எம்மை நாடுங்கள். டிசெம்பர் 31இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்.

யாழ். மாவட்டத்தில் பிரதேச ரீதியாக முகவர்கள் தேவை.

★ மேசைத் தொலைபேசிகள், கையடக்கத்தொலைபேசிகளை பெற்றுக்கொள்ளலாம்.

★ கையடக்கத் தொலைபேசிகள் திருத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

★ கையடக்கத் தொலைபேசிகளுக்கான உதிரிப்பாகங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Jaffna செலூலர்,
151¼, மின்சார நிலைய வீதி,
(விமாகி மேல்மாடியில்)
பஸ்நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம். (25400) (25-13-26-21)

தொலைபேசி இலக்கம்:
★ 0777 - 738888
★ 0777 - 209175
★ 0714 - 812565



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை அருகே 23 – 02 – 1953



ஆண்டவன் அருகே 07 – 12 – 1998

### திருமதி பரிமளம் ஜெயம் (கல்யாணி)

அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
பண்பால் உயர்ந்து நின்ற என் அன்புத்
தெய்வமே!
உங்கள் பாதமலர் தடம்பதித்த
எம்மனையில்
அணையாத தீபமாய் அன்புத் தெய்வமாய்
எமையெல்லாம் வாழவைக்கும் திருவுருவமே
விழிகள் சிந்திய கண்ணீர் இன்னமும்
காயவில்லையே தாயே!
எம் அன்னையே! பொன்போல் எம்மை
அன்புடன் அரவணைத்து நின்ற தாயே!
உன்னை பொல்லாத நோய் வந்து
நீங்கள் சொல்லாமல் போனதேன் தாயே!

பத்துமாதம் தவமிருந்து பெற்ற – உன்
முத்துக்களைப் பாதியிலே தவிக்க
விட்டதேன் – அம்மா
நம்பியிருந்த உறவுகளை
நடு வழியில் தவிக்கவிட்டு
தூர வழி சென்றதேனோ – அம்மா
சென்றுவிட்டீர் விண்ணுலகம் – நாமோ
என்ன செய்வதென்று அறியாமல்
தவிக்கின்றோம்.
தாயே எமைவிட்டு ஐந்து ஆண்டுகள்
ஓடிமறைந்தாலும்
உன் அன்பு முகம் என்றும் மறையாது
உங்கள் கனவுகள் என்றும் நனவாகும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய் : ந.நல்லம்மா
கணவர் : வ.ஜெயம்
பிள்ளைகள்: ஜெயந்தி (சுவிஸ்), சுகந்தி (பளை), வசந்தி (விஸ்வமடு), ஜெயந்தன் (ஜேர்மனி), சுமிதா (பளை), ஜெயந்தினி (பளை)
மருமக்கள்: சிறீஸ்வரலிங்கம் (சுவிஸ்), தவஞானம் (லண்டன்), சுகந்தகுமார் (விஸ்வமடு), விஜிதா (ஜேர்மனி)
பேரப்பிள்ளைகள்: சியானா, சிந்துஜா, டனக்ஷாந், கோபிநாத், சுபோஜன், பேறாமக்கள்.

நிரந்தர முகவரி:
வண்ணாங்கேணி, பளை.

தற்காலிக முகவரி:
துன்னாலை தெற்கு,
மாலிலேன் கரவெட்டி. (25432)(35-21-18-26)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை இருப்பிடமாகவும் கொண்ட யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றுகின்ற எமது அன்புக்குரிய

**திரு.சி.சபாரத்தினம்**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

உத்தியோகத்தர்கள்,
யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.



## V.P.S. SEEVAM GUEST HOUSE

தலைநகரில் கடந்த 16 வருடங்களாக மிகவும் சிறந்த சேவை செய்யும் ஒரே ஸ்தாபனமாக இயங்கிவந்த HOTEL SEEVAMS ஆனது தற்போது **V.P.S. SEEVAM GUEST HOUSE** ஆக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

1) தனி அறை (Single Room)
2) இருவர் அறை (Double Room)
3) கொமட் வசதியுள்ள மலசலகூடங்கள்
4) குளிரூட்டப்பட்ட அறை (Aircondition Room)

மிகவும் சகாயமான கட்டணத்தில் வாடகைக்குக் கிடைக்கும்.
இன்றே விஜயம் செய்யுங்கள்.

**V.P.S. SEEVAM GUEST HOUSE**

93, Vivekananda Hill,
Colombo - 13. Tel.- 326522.

(25491) (21-34-18-26)



## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகக் கிராம உத்தியோகத்தர் மு.வயவநாதன் (J/103) அவர்களின் அன்புத் தந்தையார்

**வைரவப்பிள்ளை முருகேசு**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர்.

நல்லூர்ப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்.
(25486)(34-21-18-26)



## இரண்டாவது ஆண்டு அஞ்சலி

தோற்றம் 17 - 06 - 1953



மறைவு 29 - 11 - 2001

### திருமதி யோகலட்சுமி அம்பிகைபாகன்

(சின்னக்கிளி)

திதி: சதுர்த்தசி

ஆண்டுகள் இரண்டு ஆயிடினும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உமது நினைவால் நாம் மதிமயங்கி வாடுகிறோம்
என்றும் உங்கள் திருமுகம்தான் எம்கண்களிலே தெரியுதம்மா!
இன்று உங்களை நினைந்து நாம் இதய அஞ்சலி செலுத்துகிறோம்.

மண்கும்பான் மேற்கு,
5 ஆம் வட்டாரம், வேலணை. (25487)(34-21-18-26)

- குடும்பத்தினர்.



## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 1942 - 09 - 13



உதிர்வு 2002 - 11 - 18

### அமரர் அண்ணா இராஜேந்திரம் (B.A.)

(ஓய்வுபெற்ற பதிவாளர் - மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

"ஆண்டொன்று சென்றுவிட்டது
ஆனாலும் தேறவில்லை எம்மனது!
அன்பாய்ப் பண்பாய்ப் பாசமாய் வளர்த்தீர்கள்
நெஞ்சுவெடிக்குதே ஒரு கணம் நினைக்கையில்
கதறிக் குமுறுகின்றோம்
எம்கண்ணீர் யார்துடைப்பார்? அப்பா"

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி,
பிள்ளைகள் - தேன்மொழி, தமிழினி.

"மல்லிகை",
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(25494) (26-21-18)

# தமிழீழத்தின் தலைவிதி தமிழர்களின் கையில்!
# தமிழர்களின் தலைவிதி தமிழீழத்தின் மடியில்!!

## ஒஸ்லோவில் அமுதாப் நிகழ்த்திய உரை

**விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதிகளில் ஒருவரான அமுதாப் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் ஆற்றிய உரையின் இரண்டாம் பகுதி நேற்றைய உதயனில பிரசுரமாகியிருந்தது. அதன் இறுதிப பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கையில் சமாதானம் நிலவுகிறது என்று கூறுவதை நாங்கள் நம்ப முடியாது. எனவே, பேச்சு, சமாதானம் என்பவை குறித்து எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும் இதற்காக நான் ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறேன்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் மட்டும் நாங்கள் பேசவில்லை. வடக்கு, கிழக்குத் தாயகம் சம்பந்தமாக - அதாவது, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இந்த எட்டு மாவட்டங்கள் சம்பந்தமாக - இவற்றின் 18 ஆயிரத்து 888.7 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு சம்பந்தமாக - அங்கு வாழும் 35 லட்சம் தமிழ் பேசும மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை தொடர்பாக சிங்கள அரசுடன் முதலாவது பேச்சு 1920ஆம் ஆண்டு ஜேம்ஸ் பீரிசுக்கும் அருணாசலம் ஐயாவுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடந்தது.

இரண்டாவது பேச்சு 1924ஆம் ஆண்டு ஜெயதிலக்காவுக்கும், துரைச்சாமி ஐயாவுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் நடந்தது.

மூன்றாவது பேச்சு 1957ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவுக்கும் தந்தை செல்வாவுக்கும் இடையில் நடந்தது.

நான்காவது பேச்சு 1965 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்காவுக்கும தந்தை செல்வாவுக்கும் இடையில் நடந்தது.

ஐந்தாவது பேச்சு 1985ஆம் ஆண்டு திம்புவில் ஜே.ஆருடன் நடந்தது.

ஆறாவது பேச்சுத்தான் தமிழ்மக்களின் இருண்ட காலம்; இலங்கை - இந்திய ஒப்பந்தம்.

எங்களுடைய மண்ணில் எங்களைக் கேட்காமல் இலங்கையும், இந்தியாவும் அரசியல் லாபத்திற்காக அந்த ஒப்பந்தத்தைச் செய்தன.

ஏழாவது பேச்சு 1990ஆம் ஆண்டு பிரேமதாஸ அரசுடன் பேசப்பட்டது.

எட்டாவது பேச்சு 1994ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாருடன் இடம்பெற்றது.

இந்த எட்டுச் சுற்றுப் பேச்சுக்களும் சரிவரவில்லை.

ஒன்பதாவது பேச்சு 2002 - 2003 இல் ரணில் அங்கிளுடன் பேசுகிறோம். என்ன பேசுகிறோம்? 83 வருடங்களாக தமிழன் என்ன பேசுகிறான்? வடக்கு, - கிழக்குத் தாயகத்தில் தமிழ் பேசும எமது மக்களை சுதந்திரமாக - நிம்மதியாக - கௌரவமாக - வாழவிடுங்கள் என்பதையே கேட்கிறோம். எங்களை வாழ விட்டார்களா இன்றுவரை? இலங்கை சுதந்திரமடைந்து 55 வருடங்கள் என்று கூறுகிறார்கள். 55 வருடங்களில் இந்த மண்ணில் வாழப் பிறந்த 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எமது மக்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டார்கள்.

வாழ்வுரிமை கேட்ட எமது மக்களுக்கு சாவுரிமை மட்டுமே வழங்கப்பட்டது. இதுதான் வரலாறு.

இதுதான் நடந்தது. 80 ஆயிரம் மக்களின் உயிரிழப்புக்கும் இலங்கையை ஆட்சி செய்த எந்த அரசாலும் காரணம் கூறமுடியாது எமது இளம் சகோதரிகள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். இளம் சகோதரர்கள் வெட்டி வீசப்பட்டனர். யாரும் இதைக் கேட்கவில்லை. தமிழன் புழுவாகச் செத்தபோது - தமிழன் புழுவாக நெளிந்தபோது கண்திறந்து தமிழன் ஏன் செத்துக் கொண்டிருக்கிறான்? தமிழனை ஏன் சிங்களம் சாகடிக்கிறது என்று யாருமே கேட்கவில்லை.

தலைவன் எழுந்தான்; இதைத் தடுக்க வேண்டும்; இதை, இல்லாமல செய்யவேண்டும். தமிழனுக்கு என்று நாடு உருவாக்கப்பட வேண்டும் தமிழனுக்கு ஒரு படைப்பலத்தை உருவாக்க வேண்டும்.

1972ஆம் ஆண்டு 18 வயதில் ஒரு கைத்துப்பாக்கியுடன் தமிழீழத் தேசியத் தலைவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

போராட்டம் ஆரம்பித்து 31 வருடங்கள் ஆகிவிட்டன. எத்தனையோ பேர் அழிக்க வந்தபோதும் - எத்தனையோ வல்லரசு நாடுகள் எதிராக வந்தபோதும் - இடுப்பில் குண்டும், கழுத்தில் நஞ்சும் கட்டி எழுந்து நின்று - நிமிர்ந்து நின்று - துணிந்து நின்று - போராடி இந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார் தலைவர்.

இந்த நிலையை ஏற்படுத்துவதற்காக மக்கள், புலிகள் என ஒரு லட்சம் பேர் செத்திருக்கிறார்கள். எனினும், விடுதலை இன்னும் கிடைக்கவில்லை;



சுதந்திரம் கிடைக்கவில்லை; எமக்குப் பாதுகாப்பு கிடைக்கவில்லை; எமது நாடு எமக்குச் சொந்தமாகவில்லை. 35 லட்சம் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க ஒருதமிழனுக்கு ஒரு தமிழன் என்ற கணக்கில் செத்திருக்கிறார்கள். இது வரலாறு.

இன்று சமாதானக் காலம் இருபது மாதங்களில் என்ன நடந்தது? விடுதலைப் போராட்டத்தில் முதுபெரும் தளபதிகள் உட்பட 26 போராளிகளை கடலில் நாம் இழந்திருக்கிறோம்.

சமாதானக் காலத்தில் போராளிகள் சாகடிக்கப்படுவது மன்னிக்கப்பட முடியாத குற்றம்.

போராளிகள் மட்டுமல்லர், மட்டக்களப்பிலும், திருமலையிலும் பத்துக்கும் மேற்பட்ட எமது மக்களையும் சிங்களப் படை சுட்டுக் கொன்றது. இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயம்.

இதற்கு யார் நீதி சொன்னார்கள்? அம்பாறை, காஞ்சிரங்குடாவில் எமது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட போது எந்த நாடு எமது மக்களுக்காகக் கண்ணீர் சிந்தியது? எமது மக்கள் செத்துள்ளனர் என்று யார் யோசித்தார்கள்? தமிழனைப் பற்றி யாருமே அக்கறைப்பட மாட்டார்கள். இது உண்மை. எமது பிரசசினையைத் தீர்க்க வேண்டியது நீங்களும், நாங்களும்தான் தமிழன் சாகிறான்; அவன் அழிகிறான்; அவனுக்கு நாடு கொடுக்க வேண்டும் என்பவற்றை யாரும் சிந்திக்கமாட்டார்கள். அரசியல், இராணுவ லாபங்களுக்காக எல்லோரும் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் எமது பிரச்சினையைத் தீர்க்க எவரும் தயாராக இல்லை. அவர்கள் எமது பிரச்சினையைத் தீர்க்க முன்வந்திருந்தால் 83 வருடங்களாக இந்தப் பிரச்சினை இழுபடத் தேவையில்லை.

1977 இல் போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என்று ஜே.ஆர். தமிழினத்தைப் பார்த்துக் கூறினார். புலிப்படை அன்று பலவீனமாக இருந்தது. ஆனால், இன்று எதற்கும் தயாராக இருக்கிறது. இன்றைக்கு எவனாவது, சிங்கள அரசியல் நடத்துபவர்கள் - சிங்கள ஆட்சியாளர்கள் - போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என்று தென்னிலங்கையில் கூக்குரலிட்டால் புலிப்படை இன்று இரண்டுக்கும் தயாராகத்தான் உள்ளது.

நாங்கள் தெளிவாகத்தான் இருக்கிறோம். நாம் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தம் கொடுமையானது. யுத்தம் வேண்டாம். யுத்தம் இல்லாமல் போக வேண்டுமென விரும்புபவர்கள் கை உயர்த்துங்கள் என்று கேட்டால் உலகத்திலேயே முதல் கை உயர்த்துபவர்கள் நாங்களாகத்தான் இருப்போம். அவ்வளவு தூரம் யுத்தத்தால் துன்ப, துயர வேதனைகளை நாம் பட்டிருக்கிறோம். எவ்வாறு ஒரு மனித இனம் வாழக்கூடாதோ அவ்வாறு எமது மக்கள் வாழவைக்கப் பட்டனர். எப்படி ஒரு மனித இனம் சாகக் கூடாதோ அப்படி எமது இனம சாகடிக்கப்பட்டது.

எமது தலைவர் இருக்கும்வரை தமிழனை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. வல்ல தலைவன் இருக்கும் வரை எம்மை உலகில் எவருமே எதுவும் செய்துவிடமுடியாது.

உலகின் நான்காவது வல்லரசு இந்தியா. 1987இல் அது தமிழீழத்துக்கு வந்தது. சமாதானப் பிரியர்களாக வந்து - அமைதிப் படையாக வந்து - ஆக்கிரமிப்புப் படையாக மாறியது.

இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் யாழ்ப்பாணத்தில் சமர் தொடங்கியது. சமர் தொடங்கியபோது இலங்கைக்கான இந்தியாவின் அப்போதைய தூதுவர் டிக்ஷித்.

"புலிகள் பலம் தெரியாமல் உலகின் நான்காவது வல்லரசுடன் மோதியுள்ளனர். ஒரு சிகரெட் பத்தி முடிப்பதற்குள் 2,000 புலிகளையும் அழித்து பிரபாகரனைக் கைது செய்வோம்" - என்றார். இன்றைக்கு 16 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் சிகரெட் பத்தி முடியவில்லை என்றுதான் நாங்கள் நினைக்கவேண்டியுள்ளது.

இரண்டாயிரம் போராளிகளை வைத்து மணலாற்றுக் காட்டில் இருந்து உலகின் நான்காவது வல்லரசுப் படையை எதிர்த்து போராடும் முடிவை எடுத்தபோது எமது தலைவருக்கு வயது 33. உலகில் யாருமே 33 வயதில ஒரு பெரும் வல்லரசுடன் எதிர்த்துப் போராடினார்கள் என்று வரலாறு கிடையாது.

ஒரு லட்சத்து 10 ஆயிரம் இந்தியப் படையைக் கொண்டுவந்து இறக்கினார்கள். இரண்டாயிரம் போராளிகள் ஒரு லட்சத்து 10 ஆயிரம் படையினருடன் பாரிய ஆயுதங்கள் இன்றி மன உறுதியோடு போராடினர். உலகின் நான்காவது வல்லரசுப் படை எமது மண்ணில் தோற்கடிக்கப்பட்டது; எமது மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்பட்டது. இது நடந்தது. இதை எமது தலைவர் நடத்திக்காட்டினார்.

எனவே, எங்களால் எந்த நேரத்திலும், எந்தக் கட்டத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் எதையும் சாதிக்க முடியும். இன்றைக்கு நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். நாங்கள பலமாக இருக்கும் வரை எம்மை யாரும் எதுவும் செய்யமுடியாது. எனவே, அந்தப் பலத்தைப் பெருக்கிய பெரும் பங்கு உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் பெருக்கிய பலத்தினூடாக நாங்கள் பெற்ற வெற்றிகள் அதிகம். ஆனையிறவு யாருடைய கையில் இருக்கிறதோ அவர்களுக்கு யாழ்ப்பாணம் சொந்தம் யாழ்ப்பாணம் எமக்குத்தான் சொந்தம். வரலாற்று ரீதியாக அது எமக்குத்தான் சொந்தம் இராணுவ ரீதியாகவும் எமக்குத்தான் சொந்தம். எங்களுடைய முயற்சியும் நிச்சயமாக எதையும் சாதிக்கும்.

[illegible] 2 ஆயிரம் இராணுவத்தினரும் 2 ஆட்லறிகளும் வீழ்த்தப்பட்டன. இந்த முகாமை கைப்பற்ற 24 மணித்தியாலங்களைப் புலிப்படை எடுத்துக் கொண்டது.

கிளிநொச்சியைக் கைப்பற்ற 48 மணித்தியாலங்கள். பரந்தனைக் கைப்பற்ற 23 மணித்தியாலங்கள், ஆனையிறவைக் கைப்பற்ற 34 நாள்கள், தீச்சுவாலை நடவடிக்கையை முறியடிக்க 72 மணித்தியாலங்கள் மட்டுமே புலிகள் எடுத்துக்கொண்டனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் மடி, இலங்கையின் இதயம், அங்கு யாரும் புகமுடி யாது; அதை யாரும் நெருங்க முடியாது என்று வர்ணிக்கப்பட்ட கட்டுநாயக்கவே தாக்குதலுக்குள்ளானது.

உலகில் பலம் வாய்ந்த ஆயுதம் எங்களிடம் தான் உண்டு. அதுதான் உயிர் ஆயுதம் அந்த மனிதவெடி குண்டுகள் கட்டுநாயக்கவினுள் புகுந்து 300 கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதிவாய்ந்த விமானங்களை அழிக்கும போது இலங்கை அரசின் 2 லட்சம் படையும் கண்ணைமூடிக் கொண்டா நின்றன? எங்களால் எதையும், எந்தக் கட்டத்திலும், எந்தக் களத்திலும் சாதிக்க முடியும். நாங்கள் சாதிக்கத் தயாராகவே உள்ளோம். எனவே, நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இந்த விடுதலையின் இறுதி இலட்சியத்தை அடையும் வரை உங்கள் பங்களிப்புகளையும் - கடமைகளையும் - ஒத்துழைப்புகளையும் எங்களுக்கு சோர்ந்து போகாமல் வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

சமாதானமும், சுதந்திரமும் நிரந்தரமாக எமக்குக் கிடைக்கும் வரை எமது வாழ்வும், தலைவிதியும் உங்களுடைய புலிகள் இயக்கத்தின் இராணுவப் படைப்பலத்தில்தான் தங்கியுள்ளது என்பதை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது புலிகள் இயக்கம் தலை நிமிர்ந்து நிற்கிறது. பல உலக நாடுகள் புலிகளின் சமாதான முயற்சியைப் பாராட்டியுள்ளன.

எனவே, நாம் எமது இறுதி இலட்சியத்தை அடையும் வரை, மாவீரர்களின் கனவுகளை நனவாக்கும் வரை ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்பதுதான் தலைவரின் எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பை நீங்கள் அனை



வரும் நிவர்த்தி செய்வீர்கள் என உங்கள் தலைவர் நம்பிக்கொண்டிருக்கின்றார். நம்பிக்கை என்றைக்குமே வீண்போகாது.

இன்னுமொரு விடயம் நீங்கள் யோசிக்கலாம். சமாதான காலத்தில் எத்தனையோ நாடுகள் உதவிசெய்து கொண்டிருக்கின்றனவே. புலிகள் ஏன் எம்மிடம் நிதி கேட்கிறார்கள் என நீங்கள் யோசிக்கலாம். யாரும் செய்வதாக இல்லை. 31 வருடங்கள் போராட்டத்தில் இவ்வளவு பலமாக நிற்கின்றோம் என்று சொன்னால், உங்களுடைய பணம், உங்களுடைய பிள்ளைகளின் உயிர்த் தியாகம், அவர்களின் இரத்த சிந்தல் என்பனவற்றாலேயே நாம் வளர்ந்தோம். இதனால்தான் நாம சாதனைகள் படைத்தோம். 31 வருடங்களாக இந்த விடுதலையை வளர்த்தது நீங்கள்தான். எனவே, விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் இலக்கை அடையும் வரை அதனை வளர்க்க வேண்டிய பொறுப்பும், அதைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் உங்களுடைய கையிலேயே தங்கியுள்ளது.

தமிழன் தனது தேசியக் கொடியை ஐக்கிய நாடுகள் சபையிலேயே ஏற்றி எங்களுடைய நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தவேண்டும். அந்தளவுக்கு புலிகளின் பலத்தை நீங்கள் காக்க வேண்டும் அதற்காக நீங்கள் உழைக்க வேண்டும்.

எமது தேசம் விடியும். எமது தேசத்தை விடிய வைப்போம். அது எம்மால் முடியும். அந்த நம்பிக்கையில் நீங்கள் இருக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் சாதாரணமாக 20 ஆயிரம் போராளிகள் கடமையாற்றிக் கொண்டுள்ளனர் என்று வைத்துக் கொண்டால் விடுதலைப்புலி போராளி ஒருவருக்கு ஒரு நாளுக்கு சாப்பாட்டுக்காக விடுதலைப் போராட்ட அமைப்பினால் ஒதுக்கப்படும் பணத்தின் தொகை 75 ரூபா மட்டுமே. எனவே, ஒருநாளுக்கு ஒரு போராளிக்கு 75 ரூபாப்படி 20 ஆயிரம் போராளிகளுக் கும் மூன்று நேர சாப்பாட்டுக்காக 15 [illegible] ரூபா செலவாகின்றது. என[illegible], ஒரு மாதத்திற்கு நாலரை கோடி ரூபா பணம் எமது போராளிகளின் சாப்பாட்டுக்கு மட்டும் செலவாகிறது.

அடுத்ததாக,தே[illegible] விடுதலையின் அதி உச்ச ஆயுதமாகிய உயிராயுதங்கள் கடலில் பெரும் சாதனைகளைப் படைக்கின்றன. வெடிமருந்து ஏற்றிய ஒரு படகைத் தயாரித்து அந்த படகிலே [illegible] பெரும் வெற்றியைப் பெறுவதற்கு ஒரு கோடி ரூபா செலவாகிறது. இந்த பணத்திற்கு அப்பால் விலைமதிக்க முடியாத உயிர்கள் அந்தப் படகோடு வெடித்துச் சிதறவைப்பதன் மூலமே ஒவ்வொரு இராணுவ சாதனைகளையும் நாம் படைத்துள்ளோம். தரைப்படையில் இன்று எமது கடற்புலிகள் அமைப்பை இலங்கைக் கடற்படையை விட சாதாரண ஒரு நிலைக்கு கட்டியெழுப்ப உடனடியாக 150 கோடி ரூபா தேவைப்படுகிறது. ஏனெனில், கடற்புலிகள் கைகளில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருப்பதென்பது யாரும் மறுக்க முடியாத உண்மை.

இலங்கை அரசு ஒரு மாதத்திற்குப் பாதுகாப்புக்காக செலவு செய்வது 5 ஆயிரம் கோடிரூபா. இந்த நாட்டோடு ஒப்பிட்ட உங்களுடைய விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மாதத்திற்கு பாதுகாப்பிற்காக செலவு செய்வது 250 கோடி ரூபா மட்டுமே. எனவே, எவ்வளவு குறைத்துச் செலவிட்டு எமது விடுதலையை வெல்ல முடியுமோ அதற்காக நாம் உழைத்துக் கொண்டிருக்கிறோம். நீங்களும் உழைக்க வேண்டும் என்று நான் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ் மக்களாகிய நீங்களும் நாங்களும் இடியும் மின்னலுமாக போர்க் கோலம் பூண்டிருக்கும் காலம் இது. எனவே, இந்தக் காலத்தைச் சரியாகப் பயன்படுத்தி, எம்மைப் பலப்படுத்தி, எமது இறுதி இலட்சியத்தை அடைய நாம் அனைவரும் உழைக்க வேண்டும். தமிழீழத்தின் தலைவிதி தமிழர்களின் கையில்; தமிழர்களின் தலைவிதி தமிழீழத்தின் மடியில். மாவீரர்களின் கனவை நனவாக்கும் உறுதியுடன் தொடர்வோம். மாவீரர்களின் இலக்கை அடைவோம். எந்தத் தடையையும் உடைப்போம்.

எம் தேசம் காப்போம்.

- இப்படி அமுதாப் தெரிவித்தார்.

(முற்றும்)

# நத்தார், புதுவருட பண்டிகைக் ச

























# காலமாபெரும் மலிவு விற்பனை


















நீங்கள்,
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா?
இதோ உடன் நிவாரணி
"மதுமேகரணி"
"MADHUMEAHAHARANEE'
இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில்அறிந்துகொள்ளலாம்.
உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம்
ஆலோசித்து பாவிக்கவும்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம.
SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.
(C/31746) (26-11-18-21) குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்

# ஈராண்டு ஈரவிழி அஞ்சலி

அன்னையின் மடியில் 21 - 09 - 1980



ஆண்டவன் அடியில் 07 - 12 - 2001

## செல்வன் பொன்னுத்துரை யூட்கஷன்

(வவுனியா தமிழ் ம. மகாவித்தியாலய
2000 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவன்)

என் வாழ்க்கைப் பாதையின் நடுவில் ஆண்டவர்
என் வலிமையைக் குன்றச் செய்தார் அவர் என் ஆயுளைக்
குறுக்கி விட்டார். திருபா 103/23

எம் இதயங்களைக் கவர்ந்தவனே! எம் இளைய தவப்புதல்வா!
எம் வாழ்வை வளமாக்க எம் உள்ளங்கள் இனித்ததுவே!
இருபத்தொரு வயதோடு உன் வாழ்வு முடிந்ததேனோ!
ஈசன் பாதம் சென்று ஈராண்டும் சென்றதுவோ!
உன் ஆன்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம் ஈரவிழிகளுடன்!

க.பொன்னுத்துரை
தேவாலய வீதி. மல்லாகம்.
T.P.: 077-6146718
(25383)(15-11-18-21)

அப்பா. அம்மா. அக்கா. அத்தான்.
அண்ணா. மருமகன். மருமகள்.
உறவினர்கள். நண்பர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 09 - 06 - 1938



உதிர்வு 07 - 11 - 2003

அமரர்

## ஞானப்பிரகாசம் லீனஸ்ரட்ணம்

மாதம் ஒன்று மறைந்தாலும் - பப்பா
உங்கள் இனிய நினைவுகளை
என்றும் புதிதாய்
எங்கள் இதயமதில்
நீங்காத நினைவாக - எம் நெஞ்சில்
நீங்கள் இருப்பீர்கள்.

எங்கள் அன்புப் பப்பாவின் மறைவின் போது நேரில் வந்து எம் துயரில் பங்குபற்றியவர்கள், வழிபாடுகள் நடத்திய குருக்கள், கன்னியர்கள், பக்திச் சபைகள், புனித யுவானியார் ஆலய பங்கு மக்கள், அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்கள், ஆன்மசாந்தித் திருப்பலியில் பங்குகொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலி தந்து ஆறுதல்படுத்தியவர்கள், இறுதி யாத்திரையின் போது இறை வழிபாடு நடத்திய குருக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

828/7, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
(C/31703)(24-11-18-21)

## தேவை

அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்து வாழ Green Card Lottery இல் பங்குபற்றுங்கள். விவரங்களுக்கு 0777 871617 தொலைபேசி எண்ணுக்கு அழையுங்கள்.

பாலா
தெஹிவளை

## தேவை

கொழும்பில் தங்கி
வீட்டுவேலை
செய்வதற்கும்,
யாழ்ப்பாணத்து உணவு
தயாரிக்கத்
தெரிந்தவர்களுமான
பெண்கள்
விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு:
திருமதி சிவகுமாரன்
தொ.இல.011 2683331
011 2599608

## தேவை
## விற்பனை ஆலோசகர்கள்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் இலங்கையின் பிரபல தனியார் காப்புறுதிக் கம்பனிக்கு விற்பனை ஆலோசகர்கள் தேவைப்படுகின்றனர். விற்பனை வழிகாட்டற் பயிற்சிகள் வழங்கப்படும். வடமராட்சி விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்குக.
விண்ணப்ப முடிவு திகதி: 13.12.2003
கல்வித்தகைமை: க.பொ.த (சா/த) 3 பாடங்களில் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்கள் சித்தி (கணிதம் உட்பட).
விளம்பர இல.2116,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(25482)(34-21-11 18)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்!
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
சித்தாரா பொன்னாங்காணி தைலம்
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228
யாழ். மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

சில முக்கியமான ஆவணங்கள்.... இல்லாமை
உங்கள் வாழ்க்கைப் பாதையில் பெரும் இடையூறாக
இருப்பதை உணர்ந்து இருக்கின்றீர்களா?



- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- திருமணச்சான்றிதழ்
- இறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- போன்ற ஆவணங்களின் முக்கியத்துவத்தை அறிவீர்களா?

உரிய நேரத்தில் ......
உரிய நன்மைகளை அடைய !!!!!!!
உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் ☺☺☺☺☺

அறிவித்தல்
சட்டப்படி திருமணப்பதிவுகளை செய்யாமல் இருக்கும் தம்பதிகளுக்கு இலவசமாக திருமணப்பதிவுகளை செய்வதற்கு UNHCR இன் நிதி உதவியுடன் யாழ். சமூக செயற்பாட்டு மையம் (JSAC) மாவட்ட பதிவாளர் அலுவலகத்துடன் இணைந்து இப்பதிவுகளை மேற்கொள்ளவுள்ளது. முதல் கட்டமாக இத் திருமணப்பதிவுகள் அராலிமத்தி, அராலிமேற்கு, காட்டுப்புலம் போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது. யாழ் சமூக செயற்பாட்டு மையத்தில் ஏற்கனவே தமது பெயர்களை பதிவுசெய்துகொண்ட மேற்படி மூன்று பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது பிரதேச பதிவாளர்களிடம் சென்று தங்கள் பதிவுகளை இம்மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை இலவசமாகப் பதிந்துகொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.
யாழ். சமூக செயற்பாட்டு மையம் (JSAC) 159, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். T.P: 222 3699
(சி-31747)(31)

# கியுபிட் போட் KUPID FORT
(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த ஒன்றோ இரண்டு மாத்திரைகளை தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

வைத்திய ஆலோசனையைப் பெற்று சிறந்த பயனை அடையுங்கள்.
(24921)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து

# தகுதியான தமிழ் இளைஞர்கள் விண்ணப்பித்தால் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நியமனம் வழங்கப்படும்

## நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தகுதி உள்ள தமிழ் இளைஞர்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நியமனங்கள் வழங்கப்படும். அரச திணைக்களங்களில் புதிய நியமனங்கள் வழங்கக் கூடாது என்ற அரசின் சுற்று நிருபம் இவர்களுக்கு விதிவிலக்காக அமையும்.

- இவ்வாறு நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ, நீர்வளங்கள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா உறுதி அளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கோரிக்கைக்கு கைமேல் கிடைத்த பலனாகவே அமைச்சரின் இந்த உறுதிமொழி அமைந்தது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் மேற்படி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போது செல்வம் அடைக்கல நாதன் சில கோரிக்கைகளை முன்வைத்தார்.

விவசாயத்துறையில் வன்னி மாவட்டம் முன்னணியில் உள்ளது. இப்பிரதேசத்தில் இருக்கும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் அடிப்படை வசதிகள் எவையும் கிடையா. அவர்களிடம் பயன்படுத்த முடியாத வாகனங்களே இருக்கின்றன. அவர்களுக்கு உருப்படியான அலுவலகங்களும் இல்லை.

எமது மாவட்டத்தில் பட்டதாரிகளும், இளைஞர்களும் தொழில் வாய்ப்புகள் இன்றி கஷ்டப்படுகின்றனர். ஆனால், 65 வயதாகியும் ஓய்வு பெற வேண்டியவர்கள் இரண்டு மூன்று தொழில்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். புதிய நியமனங்கள் வழங்கக்கூடாது என்ற அரசின் சுற்று நிருபத்தைக் காரணம் காட்டி இளைஞர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் - என்று செல்வம் எம்.பி குற்றஞ் சாட்டினார்.

செல்வம் அடைக்கலநாதனின் ஆதங்கத்துக்கு அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா உடனடியாகப் பதில் அளித்தார்.

அதாவது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தகுதியானவர்கள் காணப்படாமையினாலேயே ஓய்வு பெற்றவர்களை மீண்டும் மீண்டும் கடமைக்கு அழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தகுதியுடைய இளைஞர்களை சிபார்சு செய்தால், அரச சுற்றுநிருபத்திற்குப் புறம்பாக அவர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். என்னிடம் வடக்கு-தெற்கு, தமிழ் - சிங்களம் என்ற பேதம் இல்லை என்றும் கூறினார் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா.

மேலும், ஓர் உண்மையை அமைச்சர் ஒப்புக்கொண்டார். அதாவது, கடந்த 20 வருடங்களாக கதிரைகளைச் சூடாக்கிக் கொண்டு, சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஊழியர்கள் இப்பொழுது தான் வேலை செய்ய ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மாதுறு ஓயா, வான் ஓயா ஆகியவற்றின் ஆற்றுநீர் கூடிய விரைவில் வடபகுதிக்கும் திருப்பப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

இதேவேளை, புளொட் உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தன், கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறான நீர்ப்பாசனக் கொள்கைகள் நாட்டில் சீரழிவை ஏற்படுத்தின என்று விமர்சித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களைச் சிறுபான்மையினர்களாக மாற்றும் ஒரு திட்டமாகவே கல்லோயாத் திட்டம் அமைந்தது. மீண்டும் இப்படியான ஒரு நிலை ஏற்படக்கூடாது என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

காலையில் நீர்ப்பாசன அமைச்சுக்கான விவாதம் தெளிந்த நீரோட்டம் போன்று - மிகவும் அமைதியாக - நடந்தது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே அமைச்சரின் செயற்திட்டங்களை பெரிதும் வரவேற்றனர்; பாராட்டினர்.

நேற்றைய விவாதத்தின்போது நீர்முகாமைத்துவ அமைச்சர், அனைவரினது பாராட்டையும் பெற்றபோதும், தொழில் அமைச்சு, கூட்டுறவுத்துறை அமைச்சும் பெரிதும் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாகின.

மதியபோசன இடைவேளையின் பின் தொழில், தொழில்வாய்ப்புகள் அமைச்சு மீதான விவாதம் சூடு பிடித்தது. திறமான மதிய உணவு எல்லோருக்கும் தென்பை ஏற்படுத்திவிட்டது




போன்று சபை கூச்சலும் குழப்பமுமாக விவாதம் சூடாகவும் காரசாரமாகவுமே இருந்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான மஹிந்தானந்த அளுதகமகே எதிர்க்கட்சிகளின் சார்பில் அமைச்சர் மீதும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் மீதும் சேற்றை வாரி வீசுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தனது உறவினர் ஒருவரின் கல்விச்சான்றிதழில் மாற்றம் செய்து,அதன்மூலம் ஒவ்வொரு மாதமும் பல லட்சம் டொலர்களைச் சுருட்டுகின்றார். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஓர் ஊழல் நிறைந்த குகை என்று அவர் குற்றம் சாட்டினார். அப்போது, "இல்லாத பிள்ளைக்குப் பெயர் வைத்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர்; ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மூக்குடைபடுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற சிறப்புரிமையை வைத்துக் கொண்டு சபையில் ஊளையிடுகின்றனர். இவர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். இவர்களுக்காக நான் கவலைப்படுகின்றேன்."

- இவ்வாறு கூறினார் தொழில், தொழில்வாய்ப்புகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

அமைச்சுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை - பொ.ஐ.மு. உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே பட்டியல் போட்டுக்கூறிய அனைத்தையும் - ஆதாரமற்றவை என்று தெரிவித்து அமைச்சர் நிராகரித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தனது சகோதரியின் மகனை லெபனானுக்கு அனுப்ப அமைச்சில் பணம் கையாடினார் என்று கூறுகிறார் பொ.ஐ.மு. உறுப்பினர்.

பணியகத்தின் தலைவரின் சகோதரிக்கு இரண்டு பிள்ளைகள். அவர்கள் இருவருமே இலங்கையிலும் இல்லை; லெபனானிலும் இல்லை; அவர்கள் லண்டனில் இருக்கின்றனர். ஆனால், எதிரணி உறுப்பினர் எதை எதையோ எல்லாம் உளறுகின்றார்.

தொழில் வாய்ப்புகளை வழங்குவதில் நாம் எந்தவிதமான பாகுபாடுகளையும் காட்டுவதில்லை.

நாடெங்கிலும் அமைக்கப்பட்டுவரும் தொழில் இல்லங்கள் மூலம் பட்டதாரிகளுக்கும், வேலை இல்லாத இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஆனால், இவற்றை எல்லாம் கிரகிக்க முடியாதவர்களே இன்று அரசின் மீது சேறுபூசப்பார்க்கின்றனர். அதற்காக நாம் அஞ்சப் போவதில்லை, எமது பணி தொடரும்.

- இப்படி தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

இந்தச் சமயத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் எதிரணியினருக்கும் பலத்த சொற்போர் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்மாவட்ட உறுப்பினர் நடராசா ரவிராஜுக்கும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகேக்கும் இடையில் நேரடியாகத் தர்க்கம் ஏற்பட்டது.

"யாழ்ப்பாணத்தில் காட்டும் சுலுடித்தனத்தை கொழும்பில் காட்ட முடியாது" - என்றார் அளுத்கமகே, ரவிராஜ் எம்.பியைப் பார்த்து.

ரவிராஜும் சிறிதும் சளைக்கவில்லை. "யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பிலும் நாங்கள் சண்டியர்கள் தான்; எதற்கும் தயாராகத்தான் இருக்கிறோம்" என்று பதிலுக்கு அவரும் சவால் விடுத்தார்.

கூட்டமைப்பின் மற்றுமொரு உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் - தொழில் அமைச்சினால் அங்கீகரிக்கப்படாத - சட்டவிரோத - முகவர் நிலையங்கள் தொடர்பான விடயத்தை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

இந்தச் சட்ட விரோதமான முகவர்கள் வடபகுதி இளைஞர், யுவதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம் என்று கூறி, கோடிக்கணக்கான ரூபா நிதியை மோசடி செய்துவருகின்றனர். இப்படி ஏமாற்றப்பட்டவர்கள், தாம் இழந்த பணத்தைத் திரும்பப் பெற முடியாமல் தடுமாறுகின்றனர். மற்றும் சிலர் அரபு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் அங்கு ஒட்டகம் மேய்க்கிறார்கள்; பல்வேறு சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

எனவே, தொழில் அமைச்சர் இவ் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆவன செய்யவேண்டும் என்று செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் நீர்ப்பாசனம், நீர் முகாமைத்துவம், நீர்வளங்கள், தொழில், தொழில் வாய்ப்புகள் அமைச்சு மற்றும் கூட்டுறவுத்துறைகள அமைச்சு என்பனவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

நாடாளுமன்றம் மீண்டும் எதிர் வரும் 9 ஆம் திகதி கூடும்.

### நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

சண்டிலிப்பாய்,டிசெ.7

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் நினைவு தினமும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அ.பேரம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக நிறுவுநரின் புதல்வியும், ஓய்வு பெற்ற ஆசிரியையுமான திருமதி கிருபாசக்தி தர்மதாசன் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினராக சட்டத்தரணி சொ.சண்முகலிங்கமும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்விவலய கணக்காளர் ந.யோகேந்திரராசாவும் கலந்து சிறப்பிப்பர்.

நிறுவுநர் நினைவுரையை ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவராசரத்தினம் நிகழ்த்துவார்.

(எ-135)

### புதிய கட்டட திறப்பு விழா

சண்டிலிப்பாய்-டிசெ.7

சுழிபுரம் கிழக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 7.15மணிக்கு பாடசாலை ஆசிரியர் சி.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைப்பார்.

(எ-135)

# மூதூர், கிண்ணியா படுகொலைகளுக்கு கூட்டமைப்பு பொறுப்பேற்க வேண்டும்

## கி.மாகாண ஜம்இய்யத்துல் உலமாசபை குற்றஞ்சாட்டி அறிக்கை

நிந்தாவூர்,டிசெ.7

"மூதூர்,கிண்ணியா பிரதேசங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமைக்கான பொறுப்பை, முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கென பொலீஸ் நியமனங்கள் வழங்கப்படுவதை எதிர்த்து பிரதமரிடம் தூது சென்று தடைசெய்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே ஏற்கவேண்டும்."

- இவ்வாறு கிழக்கு மாகாண ஜம்இய்யத்துல் உலமாசபை மூதூர், கிண்ணியா சம்பவங்கள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் குற்றஞ் சாட்டியுள்ளது.

உலமாசபை சார்பில் அதன் தலைவர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா (மதனி) இந்த அறிக்கையை விடுத்துள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அண்மைக்காலமாக, திருமலை மாவட்டத்தில் கிண்ணியாவிலும், மூதூரிலும் இடம்பெற்றுவரும் கொலைகளும் வன்செயல்களும் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களை அரவணைத்துச் செல்ல தமிழ்த்தரப்பு தயாரில்லை என்பதையும், வன்செயல்கள் மூலம் முஸ்லிம்களை அடிபணியச்செய்து ஆளமுற்படும் அதிகார கர்வத்தின் ஓர் அங்கம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

கிழக்கு மாகாணத்திலும், திருமலை மாவட்டத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமாக இருப்பதை சகிக்கமுடியாத சக்திகளே இவ்வாறு வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டு, முஸ்லிம்களை அச்சநிலைக்கு உள்ளாக்கி அவர்களை அம்மாவட்டத்திலிருந்து வெளியேற்றி முஸ்லிம் பெரும் பான்மைப் பலத்தை குறைக்கத் திரைமறைவில் முற்பட்டுள்ளன.

முஸ்லிம்களை கொலை செய்து முஸ்லிம் பிரதேசங்களில் அமைதியின்மையை ஏற்படுத்தி அதன் மூலம் கிழக்கின் பாதுகாப்பு வெற்றிடமாகிவிட்டது என்பதை உலகுக்குக் காட்டி அரசியல் இலாபம் தேட முயலும் சக்திகளையும் நாம் கண்டிக்கின்றோம்.

சிங்களப் பெரும்பான்மை தமிழ் மக்களுக்குச் செய்யத்துணிடாத எத்தனையோ வகையான இன்னல்களை வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் அனுபவித்து வருகின்றனர். அது குறித்து பொறுமையும் காத்துவருகின்றனர்.

முஸ்லிம்மக்கள் இயன்ற வரைக்கும் நல்லுறவைப்பேண முயன்ற வருகின்ற போதிலும் தமிழ்த் தரப்போ முஸ்லிம்களுக்கு தொடர்ந்து அட்டூழியங்கள் செய்வதிலேயே முனைப்பாக இருந்து வருகின்றது. தமிழர் ஆட்சியின் கீழ் முஸ்லிம்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்பதையே இத்தகைய செயல்கள் பறைசாற்றி நிற்கின்றன.

இதேவேளை, முஸ்லிம்களின் படுகொலைகளைத் தொடர்ந்து ஏற்படும் பதற்ற நிலையினால் சில தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்வதைப் பெரிதுபடுத்தி முஸ்லிம்களை வன்செயலாளர்களாகக் காட்ட முயலும் சில தமிழ் ஊடகங்களின் இனவாதச் செயல்களை ஜம்இய்யத்துல் உலமா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. முஸ்லிம்களின் உயிர் இழப்புக்களையும், அவர்களது இடம்பெயர்வையும் மிகச் சிறிய விடயங்களாகக் கருதும் இவற்றின் பொறுப்பற்ற செயலே இன மோதலுக்குத் தூபமிடுகின்றன.

வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லிம் இனங்கள் ஐக்கியமாகவும்,பரஸ்பர புரிந்துணர்வுடனும் வாழ்வதால் மட்டுமே இப்பிராந்தியத்தின் சுபிட்சம், அமைதி ஏற்படுமென்பதைக் கருத்தில் கொண்டு இத்தகைய ஊடகங்கள் செயல்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

அண்மைய கொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை, உயிரிழந்த சுஹதாக்களின் சுவர்க்கத்திற்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் ஆறுதலுக்கும் உலமா சபை பிரார்த்திக்கின்றது.

மேலும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஜனாதிபதி துணிச்சலுடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்."

- இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிண்ணியா, திருமலை பகுதிகளில் மீண்டும் வழமையான நிலைமை

சீனன்குடா,டிசெ.7

கிண்ணியா, திருகோணமலை ஆகிய பகுதிகளில் நிலைமை மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது. இதையடுத்து, கிண்ணியாவிலிருந்து ஊழியர்கள் திருகோணமலைக்கு கடமைக்குச் சென்று வருகின்றனர். மக்களின் நடமாட்டமும் அதிகரித்திருக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை மாலை கிண்ணியா, ஆலங்கேணி தமிழ் - முஸ்லிம் மக்களிடையே சுமூக உறவை ஏற்படுத்தும் முகமாக கிண்ணியா - ஆலங்கேணி நல்லிணக்கச்சபையின் ஏற்பாட்டில் இரு சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் பேச்சுக்கள் இடம்பெற்றன. சுமூக உறவை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதெனவும், நிலைமைகளை அவதானித்து மீண்டும் ஒரு வாரத்தின் பின் பேச்சு நடத்துவது என்றும் - அங்கு தீர்மானிக்கப்பட்டது.

# மாவை எம்.பி.விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

கொழும்பு,டிசெ.7

தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவைத தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லவிடாது படையினர் தடுத்த விவகாரம் தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை எடுத்துத்தீர்வு காணும்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தெல்லிப்பழையில் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வைத்திய சாலை மற்றும் சுகாதார வைத்திய நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட மாவை சேனாதிராசா எம்பி. கடந்த மாதம் 17 ஆம் திகதி தெல்லிப்பழை தடைமுகாம் பகுதிக்குச் சென்றார்.

அங்கு இருந்தபடையினர் அவரை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

படையினரின் இந்தச் செயலைக் கண்டித்து மாவை சேனாதிராசா எம்பி. ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதனைத்தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுடனும் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுடனும் கலந்துரையாடி இந்தப்பிரச்சினைக்குப் பொருத்தமான முறையில் தீர்வு ஒன்றைக் காணும்படி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுச் செயலருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஒ-3)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.32, பிரப்பங்குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 07.12.2003 ஞாயிறு தொடக்கம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை தளபாடங்களைப் பார்வையிடலாம். (25336)

குறுகிய காலம் பாவித்த Yanmar, 6.5KW, Desel, Single Phase (Self start) இத்தாலி தயாரிப்பு ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார், 182, K.K.S. வீதி, கொக்குவில், (குளப்பிட்டி சேச் அருகில்). தொ.பே. 222-5908/0777710785. (25485)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), நல்லூர். (25473)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் இலவசமாக சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி சந்தி, யாழ்ப்பாணம். (C/31745)

புறொயிலர் 1Kg-130/=, சுத்தம் செய்தது 1Kg-200/= மற்றும் சேவல், கல்பேட் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (25441)

## கோழிக்கூடு விற்பனைக்கு

புறொயிலர்கோழி வளர்க்கக் கூடிய கல்வனைஸ் பைப்பால் செய்யப்பட்ட 15 அடி நீளமும், 7 அடி அகலம் உள்ள இரு தட்டுக்கோழிக்கூடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 42, அம்பாள் வீதி, பேச்சி அம்மன் கோயிலடி, நாயன்மார்கட்டு.(25483)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள (ரூபா45/=), அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் (ரூபா 62/=) 08.12.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25472)

## வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, ஏழாலையில் 4½ பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல.2112, மே/பா உதயன். யாழ்ப்பாணம். (25387)

தட்டாதெரு, சங்கத்தானை சாவகச்சேரியில் 2¾பரப்புக் காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.குணபாலசிங்கம், தட்டாதெரு, சங்கத்தானை சாவகச்சேரி. (25515)

## கார்கள் விற்பனைக்கு

Fiat Buffet, 404 Pegeot ஆகிய நல்ல நிலையில் உள்ள கார்கள் உடன் விற்பனைக்குண்டு. முழு நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: Dr.T.குலசிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (25429)

## வாகனம் விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட 10சிறீxxxx தொடர் இல. மொறிஸ மைனர் கார், ஜப்பான் கொண்டா மோட்டார் சைக்கிள் CD50 (பெல்வி) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-2263666, அறுபதுபாகம் கிணற்றடி, முதலாம் கட்டை, பருத்தித்துறை. (25513)

## உடன் விற்பனைக்கு

EN தொடரிலக்கமுடைய (1000 இஞ்ஜின்) மைனர் கார் சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: N.ரூபேந்திரன், இல.43, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (25512)

## கலர் மீன்கள்

கலர் மீன்கள், மீன் தொட்டிகள் அதற்கான அழகுசாதனப் பொருள்கள், குருவிகள், கூடுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (25475)

## மணமகள் தேவை

1961ஆம் ஆண்டு பிறந்த, யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, மிருகசீரிடம் நட்சத்திரம், பாவம் 55, 8 இல் செவ்வாயுள்ள, வியாபாரம் செய்கின்ற மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை. தொடர்பு: தொலைபேசி இல.226 3749 (மாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்). (C/31751)

யாழ.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1968 டிசெம்பரில் பிறந்த, 5'6" உயரமான, கேட்டை நட்சத்திரம் முதலாம் பாதம் ¾ பாவமுள்ள Maldives இல் ஆங்கில ஆசிரியராகவுள்ள மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (மணமகள் இம் மாத முடிவில் Maldives செல்ல விருப்பமுள்ளவராக இருத்தல் வேண்டும்) தொடர்பு: Dr.V.மகேந்திரன், 47,கடவைப்புலம், சுன்னாகம்.
T.P: 0776220115. (25377)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1949 இல் பிறந்த, தைமாதம் இத்தாலியிலிருந்து யாழ் வந்து பெண்ணை அழைத்துச் செல்ல விரும்புபவருக்கு 39 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. சீதனம் தேவையில்லை. தொடர்பு: வி.இல. 2114, மே/பா உதயன். (25404)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், 1970 ஆம் ஆண்டு பிறந்த, அரச திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருமான மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும், சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விள.இல.2113, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25393)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், ரேவதி நட்சத்திரம், 1974 இல் பிறந்த கிரகபாவம் குறைந்த, 5'4" உயரமான, பொதுநிறமுள்ள, Dip.in. English, Dip.in. Computer Soft, Dip. in. Ms Office படித்த தற்பொழுது NCC Computer படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. பணக கொடை தரப்படும். தொடர்பு: விள. இல.2111, மே/பா உதயன். (25380)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து, மக நட்சத்திரம், 4 ஆம் பாதம், 1979 கிரகபாவம் 42, உயர்கல்வி கணக்கியல் டிப்ளோமா 3 ஆம் ஆண்டில் பயிலும் மணமகளுக்குப் பெற்றோர் பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கின்றனர். ஆசிரியர், அரச உத்தியோகத்தர் சமமான நிரந்தரத் தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: விளம்பர இல.2115, மே/பா உதயன். (25409)

## தவறிவிட்டது

சித்தன்கேணிக்கும், கொட்டடிக்கும் (மானிப்பாய் வீதி வழியாக) இடையில் கறுப்புநிற பையில் பல முக்கிய காரியாலய ஆவணங்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ.சிவநாயகம், அளவெட்டி மேற்கு, T.P:- 021-2225764 என்பதுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (25504)

## உடன் வீடு தேவை

இருவர் கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உடன்தேவை. கொக்குவில், சுதுமலை, மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகளில் விரும்பத்தக்கது. வேண்டிய முற்பணம், வாடகை தரப்படும். தொடர்பு: செல்வராசா (கடை), அரசடிச் சந்தி, நவாலி. T.P.:2195, 2159. (25509)

## ஆங்கில வகுப்பு

தரம் 6 முதல் O/L வரையிலான வகுப்புகளுக்கு English Language, English Literature Classes 08.12.2003 இல் அரம்பமாகின்றன. தொடர்பு: கோ.சுப்பிரமணியம், இல.62, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம (அனுமதிக்கு பெற்றோர் வருகை அவசியம்). (25460)

## ஒளி விழா

பாதுகாவலன் பத்திரிகையாளர் சங்கம் நடத்தும் கிறிஸ்மஸ் ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பாதுகாவலன் பணிமனைக் கேட்போர் கூடத்தில் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ30)


Jaffna Area Piano Tuning
Repairs Under Taken
BY:
**A.S.DE ALWIS**
(Piano Tuner Technician)
Late of M/S Ephraums Bros.
Contact
T.No.: 2713600 - 0722618421. (C/31739)

**உடனே தேவை**
மின்சார உபகரணங்களில் முன் அனுபவம் வாய்ந்தவர்கள உடனேதேவை. கிழமை நாள்களில் நற்சான்றிதழ்களுடன் கீழுள்ள முகவரிக்கு நேரில் வரவும்.
**JAFFNA ELECTRICALS**
94(6), Stanley Road,
Jaffna.
(C/31735)

**எரிக் கணேஷ்**
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு விசேட கழிவு
※ இலவசமாகக் கண்களை பரிசோதித்து முகப்பொலிவிற்கேற்ப நவீன டிசைன்களினாலான பிரேம்களை பெற்றுக்கொள்ளவும்.
※ பிளாஸ்டிக் லென்ஸ், போட்டோ கிறே லென்ஸ் என்பவற்றை குறைந்த விலையில் பெற்றிடவும்.
※ நவீன முறையில் மிதப்பு பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்.
※ சொந்தப் பல்லுக்கு நிகரான சங்குப்பற்களை கட்டிக் கொள்ளவும்.
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
**எரிக் கணேஷ்**
**பல், மூக்கு கண்ணாடி அகம்,**
566, 564 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222-2486.
மாணவருக்கு விசேட கழிவு உண்டு.
கிளைகள்:
இல.91, K.K.S. Road, Kokuvil.
T.P.:222-5233.
இல.80,
K.K.S. Road,
Chunnakam.
(C/31758)(34-11-21)


## மணமகள் தேவை

**1972 இல் பிறந்த, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு 5 அடி உயரமுள்ள, அழகிய, நற்குணமுள்ள மணமகள் தேவை. சாதகம் - புகைப்படங்களுடன் விண்ணப்பிக்கவும்.**

ப.கிருஸ்ணமூர்த்தி,
(தேவி அச்சக ஒழுங்கை),
114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
போன்:2789. (25434)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் திரு.வி.கே.சிவராஜசுந்தரம் அவர்களின் பாசமிகு தந்தையார்

## வை.கணபதிப்பிள்ளை

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

இல.12, கே.கே.எஸ் வீதி,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி,
யாழ்ப்பாணம். (C/31761)(34-21-11)

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ/து).

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை யோகலிங்கம்

(இளைப்பாறிய நீதிமன்றப் பதிவாளர்)

காரைநகர், வேம்படியைப் பிறப்பிடமாகவும் 18, ஞானதிலக றோட் கல்கிசையை வசிப்பிடமாகவும்கொண்ட இளைப்பாறிய நீதிமன்றப் பதிவாளர் சின்னத்துரை யோகலிங்கம் அவர்கள் 04.12.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைப்பாறிய ஓவசியர் சின்னத்துரை - தங்கமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி)யின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (ஆசிரியர், பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி, நுவரெலியா), மீனலோசனி (லண்டன்), தர்மேஸ்வரன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், யோகேஸ்வரி (ஆசிரியை, யாழ்/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்), கிருபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீ நாராயணியின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற டாக்டர் தர்மலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, யோகேஸ்வரி, குகனேஸ்வரி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் டாக்டர் கனகசுந்தரம், காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற பதில் உதவி அரசாங்க அதிபர், காரைநகர்), துரைராஜசிங்கம் (அமெரிக்கா) காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற லிகிதர்) மற்றும் பரமேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி) அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-12-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(21-11-35)
18,ஞானதிலக் றோட்,
கல்கிசை.
தொ.பேசி.இல:0114-205895

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை. (25517)

## எஸ். ஏ. பாலரத்தினம்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - இலங்கை மின்சார சபை)

அராலியைப் பிறப்பிடமாகவும் கண்டியில் வசித்து அண்மையில் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபன் அருளம்பலம் பாலரத்தினம் 05.12.2003 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொனிட்ராவின் அன்புக் கணவரும், ஷெரின், ஜேக்கப், விக்ரர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்றூ, ரேணுக்கா (டெனா), டிலானி ஆகியோரின் அருமை மாமனாரும், ஜெயவீரசிங்கம், அருளம்மா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சன்ஜெயன், ஜோதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (07.12.2003) ஞாயிற்றுக் கிழமை பி.ப 4 மணி முதல் கொழும்பு ஜெயரத்தினா மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (08.12.2003) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

36/30 எட்மன்ரென் றோட்,
கிரில்லப்பன,
கொழும்பு - 06.
தொ.பே.இல. 0112 -512719

தகவல்:
அ.ஜெயவீரசிங்கம்
சகோதரன்
(25520)(35-21-11)


யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கு பரந்த வலையமைப்புடன்
கல்விச் சேவையாற்ற ஜனவரி முதல் வாரத்தில்
**சுன்னாகத்திலும், நெல்லியடியிலும்**
**ASIAN COMPUTERS**
O/L மாணவர்களுக்கான கொம்பியூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஆரம்பம்
மேலும் பல சலுகைகளுடன் எதிர்பாருங்கள்.
**ASIAN COMPUTER SYSTEMS**
யாழ்ப்பாணம் சுன்னாகம் நெல்லியடி


# திருமணம் புரிபவர்களுக்குத் திருவள்ளுவர் அறிவுரை



புலவர் ம.பார்வதிநாதசிவம்

ஒற்றுமையின் பிரதான பண்பு விட்டுக்கொடுத்தல் ஆகும். இது காதலன் காதலி ஆகிய இரு வரிடத்தும் அவசியம் இருத்தல் வேண்டும். விட்டுக் கொடுத்தலைத் திருவள்ளுவர் தோற்றுப் போதல் என்கிறார்.

சால்பு என்கின்ற பொன்னுக்கு உரை கல்லாக இருப்பது தனக்குச் சமம் இல்லாதவரிடத்தும் தோற்றுப் போதல் என்கிறார்.

"சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்"
-என்பது திருக்குறள்

அன்பினால் ஒன்றுபட்டுத் திருமணம் புரிபவர்கள் உனது குடும்பம் எனது குடும்பம் என்று பிரித்துப் பேசுவதை விட்டுவிட வேண்டும். கணவன் ஒருவன் தனது குடும்பம் செல்வம், கல்வி, சாதி, இவற்றினால் மேம்பட்டது என்று வாதாடி அதை நிலை நாட்டுவதில் விடாப்பிடியாக நின்றால் அது மனைவியின் மனதைப் புண்படுத்தும். இல்லறத்தைச் சந்தோசம் அற்றதாக்கிவிடும். அதே போலத் தான் மனைவி ஒருத்தியும் தனது குடும்பம் கல்வி, செல்வம், சாதி, இவற்றினால் உயர்ந்தது என்று வாதாடினால் இல்லறத்தின் அமைதியைக் கெடுத்துவிடும்.

சின்னச்சின்ன உரையாடல் களிற்கூட ஒருவரை ஒருவர் வென்றுவிட நினைக்காது தோற்றுவிடும் போதே உண்மை அன்பு நிலைக்கும்.

சேர அரசன் ஒருவன் வீரருக்கெல்லாம் வீரனாகத் திகழ்ந்தான். அவன் போர்க்களத்தில் இறங்கினால் சோழபாண்டியர் மட்டுமல்ல ஏனைய மன்னாதி மன்னர்களும் அஞ்சுவர். அத்தகைய சேர மன்னன் ஒருநாள் இரவு அந்தப்புரம் சென்றான். அந்தப்புரத்தில் அரசி மட்டுமே தனிமையில் இருந்தாள். அரசன் மீது சிறிது கோபம் உடையவளாகவும் இருந்தாள். அதனால் அரசனைக் கண்டதும் தனது கூந்தலில் இருந்த பூவை எடுத்துக் கோபத்துடன் அரசன் மீது ஓங்கி எறிந்தாள்.

அரசன் அரசியைப் பார்த்துப் "போர்க்களத்தில் சோழபாண்டிய அரசர்களோ ஏனைய அரசர்களோ என்னைக் கண்டு அஞ்சி நடுங்குகிறார்கள். நீ ஒரு பெண். சிறிதும் அஞ்சாமல் அரசன் என்றும் பாராமல் என் மீது மலரை ஓங்கி எறியலாமா? என்று சினந்தானா? அதுதான் இல்லை. பிறரிடம் என்றுமே கை ஏந்தி அறியாத அரசன் அரசிசினத்தினால் எறிந்த மலரை இருகையினாலும் ஏந்திக்கொண்டான். அது மாத்திரமா? அரசி முகத்திலே சினக்குறியைக் காட்ட, அவன் முகத்திலே புன்முறுவலைக்காட்டினான். தான் அரசியின் சினத்துக்குத் தோற்றவனாகி மலரை ஏந்திய கையுடன் அரசியின் பக்கம் சென்று பணிமொழி கூறினான். அவன் அரசியிடம் தோற்றே விட்டான். போர்க்களத்தில் துணிந்தவருக் குத்தான் வெற்றி. காதற்களத்தில் பணிந்தவருக்குத்தான் வெற்றி. "பன்மாயக்கள் வன் பணிமொழி அன்றோ நம் பெண்மை உடைக்கும் படை" என்று தலைவி கூறுவதாகத் திருவள்ளுவா கூறுகிறார். பெண்மையைச் சுடுமொழிகளோ அல்லது கடுமொழிகளோ அசைத்துவிட மாட்டாவாம். ஆனால் தலைவனின் பணி மொழி பெண்மையை நெகிழச் செய்து விடுமாம்.

எனவே, நான் பெரிது நீ சிறிது என்று வாதாடுவதோ என் குடும்பம் பெரிது, உன் குடும்பம் சிறிது என்று வாதாடுவதோ இல்லற இன்பத்தை அனுபவிக்க வழி செய்ய மாட்டாது. மெல்ல மெல்ல வெறுப்பை வளர்க்கவே செய்யும்.

இரண்டு சட்டத்தரணிகள் எதிர் எதிராக நின்று வாதாடுவது நீதிமன்ற வழக்கில் வெற்றிக்கு உதவியாகலாம். ஆனால், குடும்பத்தில் கணவனும் மனைவியும் வாதாடுவதை விட்டு, பிடிவாதத்தை விட்டு ஒருவரிடம் ஒருவர் தோற்றுப் போதலே வெற்றி தரும்.

ஒருவரை ஒருவர் மதிக்கும் போது தான் ஒருவர் உரிமையில் ஒருவர் குறுக்கிடமாட்டார். கணவனுக்குத் தன் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்களிடத்துத் திருமணத்தின் பின்பும் அன்பு செலுத்தும் உரிமையும் அவர்க்கு உதவும் உரிமையும் உண்டு. அதேபோல மனைவிக்கும் திருமணத்தின் பின்பும் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்களிடத்து அன்பு செலுத்தும் உரிமையும் அவர்க்கு உதவும் உரிமையும் உண்டு. இதனைக் கணவன் உணர வேண்டும்.

கணவனுக்கு மனைவியின் பெற்றோருடனோ சகோதரருடனோ பகை ஏற்படலாம். அதற்காக "நீ உன் பெற்றோரையோ சகோதரர்களையோ பார்க்கக் கூடாது" என்று தடுப்பது முழுச்சர்வாதிகாரம் அல்லவா? அன்பு வாழ்வில் சர்வாதிகாரத்துக்கு இடம் கொடுக்கலாமா? கொடுத்தால் அது அன்பு வாழ்வாகுமா? அது இல்லறமாகுமா? அது மல்லறமாகத்தான் அமையமுடியும்.

இல்லறம் என்றால் என்ன? அதன் இயல்பு என்றால் என்ன வென்று திருவள்ளுவர் விளக்கிக் கூறி இருக்கிறார். இல்லறத்தின் இயல்புக்கு விளக்கமாக அன்பு - பண்பு நாகரிகம் என்பவற்றைக் கூறலாம். எனவே அன்பும் பண்பும் நாகரிகமும் உடைய கணவன் துறவு நெறியில் புலனை விட முயல்வாருள்ளும் சிறந்தவன் என்று திருவள்ளுவர் கூறு கின்றார்.

"இயல்பினான் இல் வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை"

இல்வாழ்க்கைக்குரிய இயல்போடு வாழ்பவன் புலன்களைவிட முயலும் துறவு நெறியினரிலும் மேலாகிறான்.

தொடரும்.....

# அநுமனின் ஆற்றல்

-உ.தங்கா

இராவணனின் மந்திராலோசனை முடிந்தது. இறுதியில் விபீஷணன் அவமதிக்கப்பட்டு, பலவாறு அண்ணனால் தூஷிக்கப்பட்டு, இராமனைச சரணடைய வந்திருக்கின்றான். இராமன் விபீடணனைத் தன்னுடன் சேர்ப்பதா அன்றி விடுவதா என்பது பற்றி தன் படைத் தலைவர்களிடம் கேட்கின்றான். முதலில் சுக்கிரீவனது அபிப்பிராயத்தைக் கேட்கின்றான். சுக்கிரீவனோ பல நியாயங்களைக் காட்டி செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர் என்றுங் குணமில்லாத அரக்கரில் யார் சிறந்தோராக உள்ளனர் என்றான்: இதனையே கம்பர் வேறோரிடத்தில்

"இரக்கமென்றொரு பொருள் இலாத நெஞ்சினர்
அரக்கரென்றறிவர் அறத்தின் நீங்கினார்"

என்கின்றார். என்பதை எடுத்துக்கூறி சுக்கிரீவன் விபீடணன் சேர்வதை வரவேற்கவில்லை.

சாம்பவனைக் கேட்ட பொழுது-

"அறிஞரோ, ஆயினுமரிய தேவரை
செறுநரே அமைவில் கெடுதல் திண்ணமால்..."

ஒருவர் எவ்வளவு அறிவொளியாக இருப்பினும் ஒழித்தற்குரிய பகைவரை நெருங்கிச் சேர்ந்தவராயின் அழிவது திண்ணம் என்று கூறித் தன் எதிர்ப்பைக் காட்டுகின்றான்.

நீலனைக் கேட்ட பொழுது-

"காலமே நோக்கினும் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும் முறிந்து போந்தவன்...."

இவன் வந்த காலத்தை ஆராய்ந்து பார்த்தாலும் கற்றுள்ள நூல்களின் படி எண்ணிப் பார்த்தாலும் தன் அண்ணனை வெறுத்து வந்தவனை நம்பி நம் பக்கம் சேர்க்கலாமா? என்றான். ஏனைய மந்திரிகளிடத்தும் இராமன் வினாவினார். அனைவரும் ஒத்த குரலில்

"மற்றுள மந்திரக் கிழவர் வாய்மையால்,
குற்றமில் கேள்வியர் அன்பு கூர்ந்தவர்.
பற்றுதல் பழுதெனப் பழுதறாவொரு
பெற்றியி னுணர்வினர் முடியப் பேசினார்"

குற்றமில்லாத கேள்வியை உடையவர்களும் அன்புமிக்கவர்களுமாகிய மற்றுமுள்ள ஆலோசனைக்குரிய மந்திரிமார்கள் பழுதுபடாத ஒரு பண்பட்ட தன்மையை உடைய உணர்வினை உடையவராய் முடிவாக எதிரியைக் கொள்வது குற்றமாகும் என்று தீர்மானமாகக் கூறினர்.

இவர்களது பதிலால் திருப்தியுறாத இராமன் சொல்லின் செல்வனாகிய அநுமனை ஆலோசனை கேட்கின்றான்.

அநுமன் சிறந்த புத்திமான் மட்டுமல்ல குறிப்பறிந்து தர்க்கரீதியாக விடயங்களை ஆராய்ந்து கூறும் வல்லமையுடையவன். ஏற்கனவே இராமனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். விபீடணனின் உள்ளக்கிடக்கையை எடை போட்டு

## இலக்கியச் சோலை

விட்டான். இராமபிரானை வணங்கி இப்படிக்கூறுகின்றான். கம்பர் அதனை-

"வாலியின் பெருவர சிளையவன் பெற
கோலிய வரிசிலை வலியுங் கொற்றமும்
சீலமு முணர்ந்த நிர் சேர்ந்து தெளிதின்.
மேலர செய்துவான் விரும்பியே மீளான்"

ஆட்சித்தகாலத்தில் அண்ணனைக் கைவிட்டு வந்தான் என்பதால் விபீடணன் மீது குற்றஞ்சுமத்தியதை அநுமான் இதனால் நீக்குகின்றான். சுக்கிரீவனுக்கு அபயமளித்து வாலியைக் கொன்று வானர ராஜ்யத்தை சுக்கிரீவனுக்குக் கொடுத்த கதையை விபீடணன் கேள்விப்பட்டிருக்கின்றான். இதே போல அண்ணன் இராவணனால் அவமதிக்கப்பட்டு வெளியேறிய தனக்கும் இராமன் இராவணனைக் கொன்று இலங்கை ராஜ்யத்தைத் தருவான் என்று நம்பி வந்தான் என்கின்றான்.

பிறிதொரு செய்யுளில் இராவணனிலும் வலிமை பொருந்திய வாலியைக்கொன்றவன் அவ்விராவணனையும் நிச்சயம் இராமன் கொன்று வெல்லுவான் என்ற நம்பிக்கை துளிர்விட வந்திருக்கின்றான் என்கின்றான் அநுமான்.

அநுமானின் இக்கருத்தை இராமன் ஏற்றுக் கொண்டு சரணடைந்தவர்களை அடைக்கலம் கொடுத்தல் தர்மம் என்று கூறி விபீடணனை ஏற்றுக்கொள்கின்றான். இராமன். அநுமன் ஒரு சிறந்த ஞானி மட்டுமல்ல எடுத்த விடயத்தை தெளிவாக இயம்பும் திறமையும் மிக்கவன்.



கொமர்ஷல் வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கலையகத்தினால் கடந்த வாரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட மாவட்ட கலாசார விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளில் இரு காட்சிகள்.

படம் : அலுவலகப்படப்பிடிப்பாளர்

# பணிநிலை வெற்றிடம்

## நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன

| பணிநிலை | | தகைமைகள் |
|---|---|---|
| 01. கணக்காளர்<br>02. கணக்காய்வாளர்<br>03. மேலாளர் | தகைமைகள்: | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமாணி அல்லது தொழில் நிர்வாகமாணி அல்லது பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும். |
| 04. மேலாளர் - கணினி | தகைமைகள்: | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணினித்துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>2. அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் கணினிச் சான்றுடன் கணினித்துறையில் ஈராண்டுப் பட்டறிவு இருத்தல் வேண்டும். |
| 05. அலுவலர்<br>06. கணக்குப்பதிவாளர்<br>07. எழுதுநர் | தகைமைகள்: | 1. க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 08. கணினித்தரவு பதியுநர் | தகைமைகள்: | 1. க.பொ.த (உயர்தர) இல் சித்தியடைந்திருப்பதுடன் எம்.எஸ்.ஒபிஸ் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 09. அலுவலக உதவியாளர் | தகைமைகள்: | 1. க.பொ.த (சாதாரண) இல் தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். |

**நேர்முகத்தேர்வு இடம்:** வருவாய்ப்பகுதிச் செயலகம் யாழ்ப்பாணம்.
(கைலாயபிள்ளையார் கோயில் அருகாமை)

| காலம்: | | | பணிநிலைகள் |
|---|---|---|---|
| 11.12.2003 | வியாழன் | காலை 10மணி | 01 02 03 04 |
| 12.12.2003 | வெள்ளி | காலை 10மணி | 05 06 07 08 09 |

பொருத்தமான விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

குறிப்பு: நேர்முகத்தேர்வின் முன்னர் விண்ணப்பதாரிகள் அனைவருக்குமான கலந்துரையாடல் காலை 9 மணிக்கு நடைபெறும்.

**நிதித்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்**

07.12.2003

---

# சர்வதேச லயன்ஸ் கழகம்

We Serve

## மாவட்டம் 306 B

பிராந்தியம் 8, 9இல் உள்ள அரிமாக் கழகங்களின் சார்பில் அனுசரணை வழங்குவோரும் செயற்றிட்டங்களும் - லயன் டன்ஸ்ரன் கெவாட் MJF, ஹற்ரன் நாஷனல் வங்கி (யாழ்.கிளை) GFATM மலேரியா தடுப்புக்கான செயற்றிட்டம், வத்தளை லயன்ஸ் கழகம், கொழும்பு சோம செற் லயன்ஸ் கழகம்.

பிரதம விருந்தினர்: லயன் டன்ஸ்ரன் கெவாட் (MJF முன்னாள் ஆளுநர்)
சிறப்பு விருந்தினர்: லயன் உபாலி சமரசிங்க (MJF முன்னாள் ஆளுநர்)

**காலம்: இன்று (07-12-2003) ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| மு.ப. 10.00 - | மலேரியா தடைத் திட்டத்திற்கான மீன் தொட்டியின் உத்தியோகபூர்வ திறப்பு விழாவும், நுளம்பு வலைகள் வழங்கலும், |
| இடம்: | வாழ்வகம், மருதனார்மடம், சுன்னாகம். |
| மு.ப. 11.00 - | பாடசாலை தளபாட புனரமைப்புக்கான பொருள்கள் வழங்குதல், செயற்றிட்ட பெறுமதி 1,0000/= |
| இடம்: | யாழ்/வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி. |
| மு.ப. 11.30 - | 100 புற்றுநோயாளர்களுக்கான ரூபா 1000 பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களும் பணமும் வழங்குதல் செயற்றிட்ட பெறுமதி ரூபா 100,000/= |
| இடம்: | புற்றுநோயாளர் சங்கம், 124, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். |
| நண்பகல் 12.00 - | பாடசாலை மாணவர்களுக்கான கண்ணாடியும், கண் வில்லைகளும் வழங்கல். செயற்றிட்ட பெறுமதி ரூபா 85,000/= நல்லூர் லயன்ஸ் கழகத்தின் சார்பில் பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கல். |
| இடம்: | யாழ்/மத்தியகல்லூரி. |
| பி.ப. 1.30 - | அரிமாக் கழகங்களுக்கான கலந்துரையாடலும் மதியபோசனமும். |
| இடம்: | NORTHERN GUESTINN., 20, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| பி.ப. 4.00 - | மானிப்பாய் வட்ட அரிமாக் கழகத்தின் சார்பில் மானிப்பாய் திருவள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்குதலும், நீர் விநியோகத்தை ஆரம்பித்தலும். |

*சகல அரிமாக்களையும் கலந்து மேற்குறிக்கப்பட்ட செயற்றிட்டங்களை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

செயற்றிட்ட இணைப்பாளர்கள்:
★ லயன் Dr. வை.தியாகராஜா J.P. ★ லயன் F.A..சில்வெஸ்ரர்
(மாவட்ட இணைப்பாளர் சுகாதாரம்)

(25518) (25-13)

---

### விற்பனை வண்டில்கள் அன்பளிப்பு

நெடுந்தீவு,டிசெ.7

வேலணை மேற்கைச் சேர்ந்த இருவருக்கு சமுர்த்தி அதிகாரசபையின் சந்தைப்படுத்தும் பிரிவினால் நடமாடும் விற்பனை வண்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த வண்டில்கள் அண்மையில் வேலணை பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளரால் வழங்கப்பட்டன. (எ-10-111)

### கால் நடைவளர்ப்புக்கு நெடுந்தீவில் உதவி

நெடுந்தீவு,டிசெ.7

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் நெடுந்தீவுப்பகுதியில் ஆடு வளர்ப்பு மற்றும் கோழிவளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபடுபவர்களுக்கு அடுத்த வாரம் ஆடு, கோழி என்பன வழங்கப்படவுள்ளன. (எ-10-111)

### கற்றல் உபகரணம் அன்பளிப்பு

தென்மராட்சி,டிசெ.7

பளை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

சோரன்பற்று கணேசவித்தியாலயம், இயக்கச்சி அ.த.க.பாடசாலை, கோவில்வயல் அதகபாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. (எ-10-117)

### குடிதண்ணீர் கிணறு புனரமைப்பு

சுழிபுரம்,டிசெ.7

சுழிபுரம் மேற்கு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமிகோயில் மேற்கு வீதியில் உள்ள குடிதண்ணீர் கிணறு வலி. மேற்கு பிரதேச செயலகத்தினால் புனரமைக்கப்பட்டுவருகிறது.

இக்கிணறானது மேற்படி பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-10-28)

### கால்நடைகளால் தொல்லை

சங்கானை,டிசெ.7

சங்கானை பஸ்நிலையம் மற்றும் நிச்சாமம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்துவருகின்றனர். (எ-10-29)

### நிர்வாக சபை தெரிவு

வரணி,டிசெ.7

கட்டுவரம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு புதிய நிர்வாக சபை ஒன்று அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவிழா உபயகாரர்களை உள்ளடக்கியதாக நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. (எ-10-170)

### விசர் நாய்கடித்து குழந்தை படுகாயம்

தென்மராட்சி,டிசெ.7

முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை விசர் நாய்க்கடிக்கு இலக்கானதில் படுகாயமடைந்தது.

தாளையடி, வத்திராயன் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் இரண்டரை வயதான யோகேந்திரன் சிதுஜென் என்ற குழந்தையே விசர் நாய்க்கடிக்கு இலக்காகியது. (எ-10-117)

### பாலர் பாடசாலை மீண்டும் இயங்கும்

அரியாலை,டிசெ.7

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலை ஜனவரி மாதம் முதல் மீண்டும் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாலர் பாடசாலையின் புனரமைப்புக்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் நிதியுதவி வழங்கியுள்ளது. (எ-10-17)

### கல்விப் பேரவை தீவகத்தில் ஆரம்பம்

மண்டைதீவு,டிசெ.7

தீவக கல்வி வலயத்துக்கான கல்வி மேம்பாட்டுப் பேரவை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகத்தலைவர் பொறுப்பாளர் அருணாஸ்ரர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ-10-88)

# வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்தன, பா.உ

எம்.பி.பி.எஸ். (இலங்கை) எப்.ஐ.சி.எஸ். (அமெரிக்கா) எம்.டி.

## புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சர்

### தமிழ் மக்களுக்காக...

புனர்வாழ்வு மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சுப் பொறுப்பினை வகிக்கும் நான் வடக்கை முழுமையாக கட்டியெழுப்பும் பாரிய பணியினையும் பொறுப்பேற்றுள்ளேன்.

கடந்த சில வருடகாலமாக ஏற்பட்ட கடுமையான யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது உடமைகள் அனைத்தையும் இழந்தனர். முக்கியமாக வன்னியில் சுமார் ஒரு லட்சம் மக்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகினர். அங்கு நோய்க்குப் பயன்படுத்துவதற்கு ஒரு பனடோல் கூட இருக்கவில்லை. பிறந்த குழந்தையின் தொப்பூள்கொடி வெட்டுவதற்கு ஒரு கத்தரிக்கோல் இருக்கவில்லை. இரத்தம் பரிசோதிப்பதற்குக் கருவிகள் இருக்கவில்லை.

நான் இந்த மக்களின் துன்பத்தை எதிர்க் கட்சியில் இருக்கும்போதே நன்கு உணர்ந்துள்ளேன். அப்போது யுத்தம் உக்கிரமான நிலையில் இருந்தது. அவ்வேளை அந்த அப்பாவி மக்களின் துயரம் அறியாது பலர் இருந்தபோது நான் வன்னி சென்று அம்மக்களின் துயர்துடைக்க முயன்றேன். அதனால் அன்றைய ஆளும் கட்சியினர் என்னை புலிகள் என அச்சுறுத்தினர். இக்கால கட்டத்தில்தான் இன்றைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் புதிய ஐ.தே.க. அரசு தோற்றம் பெற்றது. அதிகமாக சிங்கள மக்களைக் கொண்ட கம்பஹா மாவட்டத்தில் இருந்து நாடாளு மன்றத்திற்கு தெரிவான எனக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்த அமைச்சுப் பொறுப்பைக் கையளித்தார்.

20 வருடங்களாகச் சீரழிந்த வடபகுதியை, ஒரு வருடகால குறுகிய இடைவேளைக்குள் சீரான நிலைக்குக் கொண்டு வருவதென்பது கடினமான முயற்சியாகும். அது எவராலும் முடியாத ஒரு காரியமாகும். ஆனால் நான் வடபகுதியைப் புனரமைப்பதற்கு சிறந்த பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதோடு அதற்காக இரவுபகலாக பல முயற்சிகளையும் எடுத்து வருகின்றேன். உதவி வழங்கும் நாடுகளின் உதவியுடன் மிதிவெடிகளை அகற்றுவதற்க்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேன். உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் வடக்கு மக்களுக்குத் தேவையான உலர்உணவுப் பொருட்களை பெற்றுக் கொடுத்ததுடன் தாய்சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்க்கு புதிய செயற்திட்டம் ஒன்றையும் முன்னெடுத்துள்ளேன்.

எனது தலைமையில் எமது அமைச்சின் மூலமாக வடபகுதியைப் புனரமைப்பதற்குத் தேவையான சிபாரிசுத் திட்டங்கள் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் முலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்மாநாட்டின் முலம் எங்களுக்கு கிடைத்த பெருந்தொகையான நிதியை வடபகுதிப் புனரமைப்பதற்காக செலவிட உத்தேசித்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். வெறும் கூரைத்தகடுகள், சீமெந்து மூட்டைகளை வழங்கி ஓரிரு வீடுகளைச் சீராக்குவது மட்டும் எனது நோக்கமல்ல. வடபகுதி 21 ஆம் நூற்றாண்டில் எல்லாத் தேவைகளையும் உள்ளடக்கிய வகையில் பாரிய அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பாகும். அதற்கு நான் பாரிய திட்டமொன்றை வகுத்துள்ளேன். அதனடிப்படையில் வடக்கினைப் புனரமைப்பதற்க்கு தற்போது கிடைத்துள்ள நிதியை ஒதுக்கியுள்ளேன்.

கடந்த சில மாதங்களாக எனது விடாமுயற்சியின் பிரதிபலனாக யாழ் நூலக வேலைகள் 90 வீதம் நிறைவடைந்துள்ளன. இந்த நூல் நிலையத்தை தெற்காசியாவில் சிறந்த தேசிய நூலகமாக மாற்றுவதற்கு யுனெஸ்கோ அமைப்பிடமிருந்து நிதியுதவி பெற்றுள்ளேன். இன்னும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் 65 மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாணத்திலுள்ள 55 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் உலக உணவுத் திட்டத்தின் நடவடிக்கைகளை நான் வடக்குக்கு மேலதிகமாக விஸ்தரித்துள்ளேன். மேலும் 22 மில்லியன் ரூபா வடக்கு அபிவிருத்திக்காகக் கிடைத்துள்ளது. இதைவிட நீர்வழங்கல் திட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நடைமுறைபடுத்துவதற்கு நோர்வே அரசு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. எனக்கு வடக்கில் எந்தவித அரசியல் நோக்கமும் கிடையாது. அங்கு தேர்தலில் நிற்கவும் எண்ணமில்லை. ஆனால் அன்று போல் இன்றும், இன்று போல் என்றும் நான் வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு என்னை அர்ப்பணிப்பதற்கு தயாராகவுள்ளேன்.

நன்றி,

இவ்வண்ணம்

**பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன**
அமைச்சர்
புனர்வாழ்வு, மீள்குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள்

நான்காம் மாடி, பி.ஒ.ஐ. கட்டிடம்
இல. 14, ஸ்ரீமத் பாரோன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு-1,
இலங்கை.

தொலைபேசி : 2392060
பெக்ஸ் : 2424109
ஈ-மெயில் : drjayalath@sltnet.lk
வெப்சைட் : www.drjayalath.com

# யாழ். நீர்வள சூழலியல் பாதுகாப்புத் திட்டம் (நோராட்)
## களஞ்சியப் பாவனைக்கு குத்தகை அடிப்படையில்
# கட்டடம் தேவை

மேற்படி திட்டவேலைகளுக்கான பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்குப் பாதுகாப்பான சூழலில் 2000 சதுர அடிக்குக் குறையாத விசாலமான அறைகள் கொண்ட கட்டடம் ஒன்று யாழ். நகர எல்லைக்குள் அல்லது நகரை அண்மித்த பகுதிகளில் குத்தகைக்கு தேவைப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. மழைக்காலத்தில் ஒழுக்கினால், கறையானினால் பாதிக்கப்படாத ஸ்திரமான கட்டடமாக இருத்தல் வேண்டும்.
2. பாரிய கனரக வாகனங்கள் சென்று வரக்கூடிய இடவசதி தேவை.
3. குடிநீர், கழிவறை, மின்சார வசதிகள் இருத்தல் வேண்டும்.

விவரங்களை கீழ்க்காணும் முகவரியில் உடனடியாகத் தொடர்புகொண்டு அறிவிக்கவும்.

**Team Leader**
**Jaffna Water Conservation and Environmental Management Project,**
**No.14. Sir Balan Jayatelake Mw,**
**3 rd Floor. BOI Building,**
**Colombo - 01.**

தொ.பே. 011/ 2385529

(சி-31756) (25-34-11-18)

---

# புனர்வாழ்வளிப்பு, இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்த்துகை அமைச்சு
## யாழ். நீர்வள சூழலியல் பாதுகாப்புத் திட்டம் (NORAD)

தேவை :-

(i) L இரும்பு (Angle iron)
(ii) முறுக்குக் கம்பி (TOR Steel)

மேற்படி திட்டத்தின் திண்மக் கழிவுகளைப் பயன்படுத்திக் கூட்டெரு தயாரிக்கும் தொழிற்சாலைக் கட்டடத்திற்குப் பின்வரும் உருக்கிரும்புப் பொருள்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

(அ) L இரும்பு - 2½" x 2½" x ¼"
(Angle iron) - (60மி.மீ. x 60மி.மீ. x 6மி.மீ.)
நீளம் 3000 அடி

(ஆ) முறுக்கிரும்பு - கம்பி அளவு:
(i) நீளம்:- 20 அடி
(ii) விட்டம்:- 1" (25மி.மீ)
- 3/4" (20மி.மீ)
- 5/8" (16மி.மீ)
- 1/2" (12மி.மீ.)
- 3/8" (10மி.மீ)

ஒவ்வொரு 20 அடிக்கம்பியின் விலையைக் குறிப்பிடுக. விலை விவரத்தை உடனடியாகக் கீழ்க்காணும் முகவரியில் கையளிக்கவும்.

திட்டமுகாமையாளர் (NORAD),
இல.1, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/31755) (34-25-11-18)

---

# ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை
## பயிற்சி வகுப்புகள்

எமது விரிவுரையாளர் குழு:
மொழியாற்றல் - க.தர்மராஜா
பொது உளச்சார்பு - T.திருமுருகன்
பொது அறிவு - பொன்.சந்துரு, K.கிரிதரன்

ஆரம்பம் 08-12-2003 திங்கள் காலை 9 மணி (பழைய நேரம்)
வார நாள்களில் திங்க. செவ். புதன். வியா.- 9 மணி.

## நியூட்டன்

(34-11-25-18) ஆரியகுளம் சந்தி அருகில் யாழ்.நகர். (25522)

---

# ஈரவிழிகளில் ஆறாம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 04 - 09 - 1939
மறைவு 07 - 07 - 2003

## அமரர் கந்தர் லிங்கமூர்த்தி
(ஓய்வுபெற்ற சாரதி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

அன்புத் தெய்வம் மறைந்து ஆறுமாதங்களாகி விட்டனவே!
ஆறுதலும் தேறுதலுமின்றிக் கலங்குகின்றோம்
ஆலமரம் போல் நீங்கள் இருக்க விழுதுகளாய் நாங்களிருந்தோம்
ஆனந்தமும் மகிழ்ச்சியும் அகன்றே போய்விட்டன
ஊருக்காக வாழ்ந்திருந்த உத்தமரே! பிரிவு தாங்க முடியாது
தவிக்கின்றோம் தரணியிலே. ஒரு முறை வாரீரோ?

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
அன்பு மனைவி,
மக்கள்.

கலைவாணி வீதி,
கோண்டாவில். (25523) (26-34-25-11-18)

---

# நெஞ்சம் மறவாத நினைவுகளுடன் ஓராண்டு



இவ்வுலகில் 1944 - 10 - 15
இறை உலகில் 2002 - 11 - 18

அமரர்
## முருகேசு குணநாயகம் (M.G.M.)
(பிரபல ஆயுர்வேத வைத்தியர், சந்தம் புளியடி - காரைநகர்)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
அன்புடையோர் நெஞ்சில் வாழ்கிறீர்கள்
நீண்ட நினைவுகளைத் தந்து பிரிந்தீர்களே!
நிமலனடியில் நீங்காமல் வாழவேண்டுகிறோம்.
ஓம் சாந்தி

நிரந்தர முகவரி:
சந்தம் புளியடி,
காரைநகர்.
தற்காலிக முகவரி:
75/1, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

ஓராண்டு நினைவுகளுடன்:
மனைவி: கு.ரோசமலர்,
மக்கள்: கு.கௌஷிகா,
கு.ரவிசங்கர்,
சகோதரர்கள், மைத்துனர்கள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(25524)(34-25-11-18)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணேசன் செல்வேஸ்வரி

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணேசன் செல்வேஸ்வரி அவர்கள் 05.12.2003 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையா கணேசனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் திருமதி பரிமளா ரவீந்திரன், க.கிரிதரன் (ஆசிரியர்), க.சனாதரன் (சுவிஸ்), திருமதி கோசலா வேல்நாதன் (சுவிஸ்), க.வினோதரன் (கணக்காளர்) ஆகியோரின் அருமைத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2003) ஞாயிற்றுக்கிழமை 29/1A, கல்கிசையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
உடுப்பிட்டி. (25521) (34-25-11-18)

தகவல்:
க.கிரிதரன்.

## வைரவநாதர் சதாசிவம்

பொன்னாலையைச் சேர்ந்த வைரவநாதர் சதாசிவம் அவர்கள் நேற்று (06.12.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் ,பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொன்னாலை,
சுழிபுரம். (25530) (25-34-11-18)

# லெப். கேணல் மதியின் 15ஆவது ஆண்டு நினைவு தினம்

**10.12.2003**

மேற்படி தினத்தை முன்னிட்டு பின்வரும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

1. மரதன் ஓட்டப்போட்டி.
2. வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்கள் முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி.

பங்குபற்ற விரும்புவோர் 08.12.2003க்கு முன்னர், சுன்னாகம், கந்தரோடை வலிகாமம் கோட்ட அரசியல் துறை அலுவலகத்திலும், அளவெட்டி அரசியல்துறை தெல்லிப்பழை கோட்ட அலுவலகத்திலும் பதிவு செய்து கொள்ளலாம்.

(சி-31767)(31-16-17)

*தகவல்:*
*அமைப்புக்குழு,*
*தெல்லிப்பழை பிரதேச அரசியல்துறை,அளவெட்டி.*

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 30 - 12 - 1938



ஆண்டவன் அணைப்பில் 07 - 12 - 1999

## திருமதி சர்வேஸ்வரி சிவலிங்கம்

அன்பு என்னும் நீர் ஊற்றி
அரவணைத்து நெகிழ வைத்தாய் அம்மா!
அருவி நீர் சொரியும் விழிகளுடன்
உழலுகின்றோம் நிதமும் உம் வருகைக்காய்!

என்றும் உங்கள் நினைவுடன்
**கணவர், மகன், மருமகள், சகோதரி, பெறாமக்கள், மருமகன்.**

*கே.கே.எஸ்.வீதி,*
*இணுவில்.*

(25508) (26-16-17)


சுயதொழில்களுக்குத் தேவையான




ஐஸ்கிறீம், பொப்கோர்ன், கென்டிப்ளொஸ் போன்ற பல கலையுணவு தயாரிப்பு இயந்திரங்களை வாங்குவதற்கு நாடுங்கள்

**கெட்லங்கா லிமிட்டட்**
252, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொ.பே.: 2459734-6 பெக்ஸ்: 2459738.

**லஷ்சுமி சினிமா** இணுவில்
ஜீவா, ஸ்ருதிகா, பிரகாஸ்ராஜ் நடிப்பில்
**அரசு** (சீலல்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)
(25469)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல் மாதவன், ஜோதிகா, மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
**பிரியமான தோழி** (சீலல்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/31620)

**லிபேட்டி** அச்சுவேலி
விக்ரம், ஜோதிகா, ரிமாசென், விவேக் நடித்த
**தூள்** (சீலல்)



காட்சிகள்.: 10.30, 3.00, 7.00. (பி.நே.)
செவ்வாய் முதல் பார்த்திபன் கனவு
(C/31621)

**நிறைஞ்சனாஸ்** சிங்கமலை
விஜய், ஜோதிகா நடித்த
**திருமலை** (சீலல்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு
CATCH ME IF YOU CAN
இரவு 8.45 இற்கு (பி.நே)
(C-31619) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்
சிலம்பரசன், ஷர்மி நடித்த
**காதல் அழிவதில்லை**
காட்சிகள்: 10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
9/12 முதல்
எனக்கு 20 உனக்கு 18 (சீலல்)
(சி-31577)

# WANTED - SALES REPRESENTATIVES

யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட 25 வயதிற்குட்பட்ட ஆண் ஒருவர் கம்பனியொன்றின் விற்பனைப் பிரதிநிதியாக யாழ்.மாவட்டத்தில் வேலை செய்யத்தேவை.

விண்ணப்பதாரர் கடினமாக உழைக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். **முன்அனுபவம் விரும்பத்தக்கது.** உங்கள் விண்ணப்பத்தில் உங்கள் தொடர்பிலக்கத்தையும் குறிப்பிட்டு கீழ்க்கண்ட இலக்கத்திற்கு உடனடியாக Fax செய்யவும்.

**Fax No: 011 2588777**

(C/31757) (26-16-17)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 03 - 1910



மறைவு 18 - 11 - 2002

## அமரர் சின்னத்தம்பி இரத்தினம் பத்தர்

திதி: சதுர்த்தசி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உமது நினைவுடனேயே நாமிங்கு வாழ்கிறோம்
எங்கு பார்த்தாலும் உங்கள் திருமுகம்தான் தெரிகிறதே
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டி நிற்கிறோம்.

இன்று (07-12-2003) ஞாயிற்றுக்கிழமை எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் எங்களது இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கலைமகள் வீதி,*
*கல்வியங்காடு*

(25516) (26-36-16-17)

**இ. தங்கேஸ்வரன்** (மகன்)
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னமணி கார்த்திகேசு

'செல்விவளவு' இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னமணி கார்த்திகேசு நேற்று (06-12-2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் வெற்றியர் மற்றும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிள்ளை(கனடா), பூலோகம், ஈஸ்வரி( ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சிவம்( ஆசிரியர், யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்), யோகலிங்கம் (கனடா), சிறிநவக்கிளி(கனடா), ஈஸ்வரலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகேந்திரம்(கனடா), கோபாலகிருஷ்ணன், குட்டித்தம்பி, சிவசாந்தி, உமா(கனடா),ரகுமதி(கனடா), ரஜனி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருசாந்தன்(மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், யாழ்.செயலகம்), ருசியந்தன்(கிளிநொச்சி ஆயப்பகுதி), சிவாஸ்கர்(கனடா), செந்தீரன்(கனடா), யாழேந்திரன்(கனடா), கிருஷ்ணாநந்தி(மாணவி, யாழ்பல்கலைக்கழக வணிகபீடம் 4 ஆம் வருடம்), அனுஷாந்தன், குணாளன், கிருஷ்ணப்பிரியா, மகிழ்ப்பிரியா, புவிசாந்தன், கார்த்தியாழன், கார்த்தியானந், அமரரான கார்த்திஆனந்தி, கார்த்திகாயன், கார்த்திகப்பிரசாந் கார்த்திகப்பிரகாஷ் பிரியங்கா(கனடா),உமையங்கா (கனடா), வாரணன்(கனடா),கார்த்திகா(கனடா), கார்த்திகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

*'செல்விவளவு' இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*
(சி-31774)(36-16-17)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி அலமேலு சாரி(Chari)

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி அலமேலு சாரி(**Chari**) அவர்கள் 30-11-2003 அன்று **Toronto canada** இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் S.T.Chari(சாரி) அவர்களின் அன்பு மனைவியும் அமரர் சுந்தரராஜ ஐயங்கார் (முன்னாள் ஆசிரியர், இராமநாதன் கல்லூரி மருதனார்மடம்) அவர்களின் அருமை மகளும் ஸ்ரீராம் (வாசு - கனடா), விஜயராகவன் (விஜி - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவவர்தினி, சுபானி ஆகியோரின் அருமை மாமியாரும் பூமிகாவின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 03-12-2003 புதன்கிழமை Toronto, Canada இல் நடைபெற்றன என்பதனை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

**தகவல்:**
ஸ்ரீராம்- *(905) 472 - 2805 (e-mail: chari@baystreet.ca)*
விஜி-*(905) 831 - 3615 (e-mail: chariv@rogers.com or vijay.t.chari@hp.com)*

(31766)(36-16-17)

## சின்னத்தம்பி அன்பு

அராலியைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்பு அவர்கள் 5.12.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லப்பிள்ளையின் மூத்த மகனும் ஆசைக்கிளியின் அருமைக் கணவரும் விக்னேஸ்வரன் (ஜேர்மனி), விஜயசந்திரன்(பிரான்ஸ்), விமலேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பவானி(ஜேர்மனி), வசந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் பிரகெவின்(பிரான்ஸ்) அவர்களின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.12.2003) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் பண்ணைவீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (25540) (36-16-17)
தகவல்:
**அ.விஜயச்சந்திரன்**
மகன்-விஜயன்

## திருமதி சோமசுந்தரம் நாகம்மா

வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த சோமசுந்தரம் நாகம்மா அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புவனேஸ்வரன், ஸ்ரீரஜனி, ஸ்ரீரஞ்சினி(சுவிஸ்), ரவீந்திரன்(சுவிஸ்), காலஞ்சென்ற ஸ்ரீராஜினி, ஸ்ரீநந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் வேலாயுதம் சிவலிங்கம்(சுவிஸ), பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் வித்துவான் கந்தையா, காலஞ்சென்ற பூரணம், குருசாமி, பொன்னம்மா, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜதீபன், லதீபா, அஜீபன், சிவகௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆனைக்குட்டி மதவடி தெல்லிப்பழையில் உள்ள அவரின் இல்லத்தில் நாளை(08-12-2003) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தெல்லிப்பழை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக் கொள்ளவும்.

*ஆனைக்குட்டி மதவடி,*
*K.K.S. வீதி,*
*தெல்லிப்பழை.* (c-31772) (3 6-16-17)
தகவல்:
**த.வேலாயுதம்**(மருமகன்)

## நடராஜா தையல்நாயகி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராஜா தையல்நாயகி - பிள்ளை 06-12-2003 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கு. நடராஜாவின் ( முன்னாள் சித்தன்கேணி விதானையார்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சித்தன்கேணி தம்பாப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற மங்களராஜேஸ்வரி மற்றும் சந்திரராஜா (கொழும்பு), சாரதாம்பாள், தவராஜ்குமார் ( **FORUT**, யாழ். மேற்கு), பின்னாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாதம்( இளைப்பாறிய A.I), காலஞ்சென்ற புஸ்பராஜலிங்கம் மற்றும் ருக்குமணி, அம்பிகாதேவி, நகுலேஸ்வரன்(சுந்தர்சன், மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கதிரவேற்பிள்ளை( இலங்கை வங்கி), கனகாம்பாள்(ஆஸ்திரேலியா), ஆனந்தராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருணேஸ்வரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), உஷாதேவி(ஆசிரியை, பண்டாரவளை), பிரபாகரன் ( M.O.H, ரத்தோட்ட), யசோ (ஆஸ்திரேலியா), ஜீவாகரன்(கலதாரி ஹோட்டல், கொழும்பு), ஜயந்தன் (மாலைதீவு), திலீபன்(கனடா), கிஷாந்தன், கனிஷா, கமலினி (பிரான்ஸ்), மகிளினி, அரவிந்தன்(யாழ்.இந்துக்கல்லூரி), வினித்தா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), குலதீபன், சிவப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-12-2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*பிரதான வீதி,*
*சித்தன்கேணி.* (25539) (3616-17)
தகவல்:
திரு.ந.தவராஜகுமார்(மகன்)

# வெளியுறவுக் கொள்கையை மாற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இடையில் முரண்பாட்டை வளர்த்து மோத வைக்க அந்தச் சக்திகள் முனைந்துள்ளன. இந்தச் சக்திகளை நம்பி ஈழத்தமிழர்களை இந்தியா பகைக்கக்கூடாது. நேச சக்தியாகப் பார்க்கவேண்டும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தொடர்பாக பிணக்குகள் ஏற்பட்டனதான். அந்த விடயத்தில் இரு தரப்புக்களிலும் தவறுகள் இருக்கலாம்.

ஆனால், புதிய யுகத்தில், புதிய சகாப்தத்தில் இந்தியா தனது வெளியுறவுக் கொள்கைகளை மாற்றி ஈழத் தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டி விடுதலைப் புலிகளுடன் நட்புறவை வளர்க்குமாறு அன்புடன் கேட்கின்றேன். - என்றார்.

அவரது உரையில் பெரும் பகுதி சமகால அரசியல் பற்றியதாக இருந்தது.

மாவீரர் நாள் உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்த விடயங்களுக்கான விரிவான விளக்கமாகவும் அது அமைந்திருந்தது.

உரையின் தொடக்கத்தில் கடந்த வருடம் சந்திரிகா அம்மையாரைக் கண்டல் செய்தது போன்று இம்முறை எதுவும் கூறமாட்டேன் என்று சொல்லிவிட்டே ஆரம்பித்தார். "அம்மாவோட பிரச்சினை என்றால் அடுத்த மாதம் தலைவரைச் சந்திக்க வன்னிக்குப் போகும்போது என்னை நாலாவது மாடியில் வைத்து நாரியை முறித்துவிடுவார்கள்" - என்று கூறினார்.

கடந்த சில காலமாக அரசியல் பணிகளில் இருந்து தான் சற்று ஒதுங்கி இருந்தது பற்றியும் விளக்கமளித்தார்.

"இதைப்பற்றி சனமெல்லாம் பேசத் தொடங்கிட்டுதுகள். பத்திரிகைகளும் எழுதின. 'சுடர் ஒளி' பத்திரிகை. தலைவரும் பாலாவும் ஒரு குடும்பம். அவர்களுக்கு இடையில ஊடலும் வரும் கூடலும் வரும் என்று செய்தி வெளியிட்டது. இதை அடுத்து தலைவர் எனக்கு ரெலிபோனில விரைவில் மக்கள் களத்தில் இறங்கும்படி சொன்னார். மக்களுக்கு உண்மை நிலையைக் காட்டவேண்டும் என்று கூறினார்" - என்றார் பாலா.

கொழும்பில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் பற்றியும் அவர் விமர்சித்தார். ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளே தற்போதைய குழப்பங்களுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டினார். அதிகாரம் அற்ற அரசுடன் விடுதலைப் புலிகள் பேச முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

சமாதானப் பாதையில் விடுதலைப் புலிகளின் பயணம் தொடரும் என்று தெரிவித்த அவர், எக்காரணம் கொண்டும் புலிகள் போருக்குச் செல்லமாட்டார்கள் என்றும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றியும் அவர் கருத்துக்களைத் தெரிவித்தார். "சங்கரி போன்ற சாரைப் பாம்புகள்கூட இப்போது வெளிக்கிட்டிருக்கினம். நாம் ஒன்றை சங்கரிக்கு கூறவிரும்புகின்றோம். நீங்கள் பயப்படாதீர்கள். நாங்கள் முந்தியப்போல உங்களைத் 'தேடி வரமாட்டம்.' கொழும்பில ஆக்களை வைத்து அவர் சண்டித்தனம் செய்யிறதாயும் கேள்விப்பட்டோம்"- என்றார் பாலசிங்கம்.

ரணிலின் அரசியல் செயற்பாடுகள் பற்றியும் அவர் விமர்சித்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க அவர் முனைவதாகவும் பாலா குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் பற்றிக் குறிப்பிட்ட அவர், "பொதுநலவாய அமைப்பு பொதுச் செயலாளர் பதவிக்கு அவர் போட்டியிட்டவர். ஆனால், ஒன்றும் கிடைக்கேல்லை. என்னைப் பொறுத்தவரையில் அவருக்கு என்ன பதவி என்றாலும், பொறுப்பு என்றாலும் கொடுத்து முதலில கொழும்பு அரசியலில இருந்து அவரை வெளியேற்றவேண்டும். அம்மாக்குப் பக்கத்தில் இருந்து சகுனி வேலை செய்துகொண்டிருக்கிறார். எல்லாக் குழப்பத்துக்கும் அவர்தான் காரணம்" என்றும் தெரிவித்தார்.(ம-3)


## ரஷ்யாவில்

மருத்துவக் கல்வி

SECOND BATCH

இரண்டாவது தொகுதி

SMOLENSK STATE MEDICAL ACADEMY

DOCTOR OF MEDICINE(MD)

MEDICINE - 1800 US $ (annually)

6 Years (IN ENGLISH)

2003/2004 கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. Admission மற்றும் மேலதிக தகவல்களை விடுமுறையில் இலங்கை வந்துள்ள மருத்துவ மாணவன் மூலம் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

T.SAYANTHAN
672, K.K.S.ROAD, Jaffna.
021- 222 2536
011 273 6240
0777 316 273
e.mail: Smolenskmedical@hotmail.com



## ஆசிரியர் தேவை

தரம் 9, 10, 11 இற்கு தமிழ் கற்பிக்கக்கூடிய அனுபவமுள்ள ஆசிரியர் தேவை. பிற்பகல் 4.00 - 6.00 வரை நேரில் வரவும்.

இயக்குநர்,
சயன்ஸ் அக்கடமி,
யாழ்ப்பாணம்.


## ஈ.பி.டி.பிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து வெளியேறியபோது அவர்களுடன் இந்தியாவுக்குச் சென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

"இந்தியாவில் கூலி வேலை செய்து எமது அன்றாட வாழ்வை நடத்தி வந்தோம். இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர்களான ஜீவன், பாண்டி ஆகியோர் என்னைச் சந்தித்து தங்கள் அமைப்பில் இணைந்து பணியாற்றுவதற்கு சம்பளத்திற்கு ஆள்களைச் சேர்ப்பதாகக் கூறி ஆசைகாட்டி என்னையும் வேறு சிலரையும் இந்தியாவில் இருந்து படகு மூலம் மன்னாருக்கு கொண்டு வந்தனர்" - என்றார் அவர்.

கொழும்பு ஈ.பி.டி.பி. தலைமைக் காரியாலயத்தில் தன்னைச் சந்தித்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தன்னை யாழ்ப்பாணம் சென்று தினமுரசு பத்திரிகை விற்கப் பணித்ததாகவும் அவர் கூறினார்.

"பின்னர் நாம் இராணுவ விமான மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டோம். இங்கு ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள கட்சி அலுவலகத்தில் மூன்று மாதம் தடுத்து வைக்கப்பட்டேன். பின்னர் தினமுரசு பத்திரிகை விற்க என்னை அனுப்பினார்கள்.

"நான் பத்திரிகை விற்றபோது மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பைச் சந்தித்தேன். இதனால், இந்த அமைப்பில் தொடர்ந்து இருப்பது நல்லதல்ல என்று உணர்ந்த நான் கடந்த மாதம் 7ஆம் திகதி ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து தப்பி வந்து யாழ்ப்பாணத்தில் ஒரு பாதுகாப்பான இடத்தில் இருந்தேன். கடந்த 4ஆம் திகதி முகமாலையூடாக வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தேன்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, விமல் என அழைக்கப்படும் ஐயம்பிள்ளை யோகராஜா என்ற தமது உறுப்பினரை புலிகள் கடத்திச் சென்றுவிட்டனர் என்று ஈ.பி.டி.பியினர் விடுத்த செய்திக்குறிப்பொன்றில் தெரிவித்துள்ளனர்.

"வைத்தியசாலை வளாகத்தில் வைத்து புலிகளால் எமது உறுப்பினர் விமல் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று நாங்கள் முறைப்பாடு செய்திருந்தோம். எனினும், இதுபற்றி பொறுப்பு வாய்ந்தவர்கள் தீவிர அக்கறை செலுத்தியிருக்கவில்லை" - என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)


## விற்பனைக்கு

புத்தம்புதிய Tiger ஜெனரேட்டர் (950 W) Full Power எஞ்சின்கள் விலை ரூ. 8800/=, Pion Sonic VCD பிளேயர்கள் விலை 3250/= விற்பனைக்கு வந்துள்ளன. S.K.C. கொப்பி Normal (No.1) (133/=) 4 CD கவர் 45 /= (கையிருப்பு உள்ளவரை)

தொடர்புகளுக்கு:
சிவா வீடியோ லைபிறறி
இராமலிங்கம் வீதி, முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.


# ஆலங்கேணி, ஈச்சந்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிறில் தென்னக்கோன், பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஆகியோரின் அனுமதியுடன் தம்பலகாமம் ஊடாக தரை வழியாக சிவாஜிலிங்கமும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் நேற்றுக் காலை அந்தப் பகுதிக்குச் சென்றனர்.

அங்குள்ள நிலைமையை ஆராய்ந்த பின்னர் திருமலை திரும்பிய அவர், உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்களின் அச்சுறுத்தல் காரணமாக ஆலங்கேணி, ஈச்சந்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆறாயிரம் தமிழர்கள் முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர். வெளித் தொடர்புகள் ஏதும் இன்றி பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் அச்சத்துடன் அவர்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளும் போதியளவில் கிடைக்கவில்லை.

அந்தக் கிராமங்களைச் சூழவுள்ள கிராமங்களில் முஸ்லிம்கள் வாழ்வதால் அக்கிராமங்கள் ஊடாக தமிழர்கள் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், தமிழ்க் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வேறு இடங்களுக்குத் தொழிலுக்குச் செல்ல முடியாதுள்ளது.

அவர்களுக்கு மூன்று தினங்களுக்கான நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டன. அந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு ப.நோ.கூ. சங்கக் கிளை தடையாக உள்ளது.

அக்கிளையின் முகாமையாளர் முஸ்லிம் என்பதால் கிளை பலநாள்களாகத் திறக்கப்படவில்லை.

"விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக வரைவை கொடுத்த சமயம் தெற்கில் அரசியல் நெருக்கடி ஜனாதிபதியால் தோற்றுவிக்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் இந்தியாவில் தற்சமயம் இருக்கும் போது இங்கு குழப்பம் ஏற்படுத்தப்பட்டது. இவற்றை நோக்கும் போது சமாதானத்துக்கு எதிராக செயற்படும் தரப்பு ஒன்றுதான் இக்குழப்பங்களுக்குப் பின்னணியில் இருப்பது வெளிச்சமாகின்றது" என்று நான் அந்த மக்களிடம் கூறினேன்.

"முஸ்லிம் மக்களுக்கு உதவ பலர் இருப்பதுபோல், தமிழ் மக்களாகிய உங்களின் பிரச்சினையை நேரில் அறியவும் தார்மீக ஆதரவை வழங்கவும் நாம் இங்கு வந்தோம்" என்றும் அவர்களிடம் தெரிவித்தேன்.

அந்த மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண உயர் மட்டத்துடன் பேசவிருக்கின்றேன். - என்றார் சிவாஜிலிங்கம் எம்.பி.

(ம-3)

## 15 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடன் முதலீட்டுச் சபையின் அதிகாரிகளான எஸ்.பாஸ்கர், சன்னடி சில்வா ஆகியோரும் இங்கு வருகின்றனர்.

கைத்தொழிலாளர்களையும் அரச அதிபர் மற்றும் அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்து கைத்தொழில் முயற்சி குறித்து ஆராய்வர்.

அச்சுவேலி கைத்தொழில்பேட்டையை மீள ஆரம்பிப்பது குறித்தும் இவர்கள் ஆராய்வர். இரு தினங்கள் இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்பர்.

(ம-3)


## CAT & AAT

June 2004 Exam இற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அலுவலக நேரம் : திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 10.00 - 2.00 p.m.

CAREER. COM INSTITUTE
No. 79, Main Street, Jaffna.


## மரண அறிவித்தல்

### திருமதி இராசதுரை அன்னம்மா

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசதுரை அன்னம்மா நேற்று (06.12.2003) சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் கந்தசாமி, நடேசபிள்ளை, மகேந்திரநாதன், குகேந்திரராஜா (பிரான்ஸ்), கலாராணி, பாஸ்கரதேவன்(பிரான்ஸ்), உஷாதேவி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சோமசுந்தரத்தின் அன்புச் சகோதரியும் ராஜினியின் மைத்துனியும் ராஜராணி, சரோஜினிதேவி, ரூபவதி, நேசமலர், கந்தசாமி, அருந்தவநீதி, நிலானி, டிலானி, காலஞ்சென்ற சஞ்சீவன், ரஜவன் ஆகியோரின் மாமியாரும் சுபாங்கன், சுதாகரன், நீவன், ஐங்கரன், கஜமுகன், அபனீஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38,முருகமூர்த்தி வீதி*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
இ.நடேசபிள்ளை
(மகன்)


## புதிய கல்வியாண்டு இன்று ஆரம்பம்


### ரேடியன்ற் கல்வி நிறுவனம்

புங்கன்குளம் அரியாலை சனசமூக நிலையம் பி.ப. 3.00 மணி.

சென்.பெனடிக் றோட், அரியாலை காலை 7.00 மணி.

அனுமதிகளை இன்றே பெற்றுக்கொள்ளவும். (25525) (22-13-18)





## ASIAN தளபாடம்

மற்றும் கட்டில்கள், மெத்தைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், Computer மேசைகள், அலுவலக உபகரணங்கள் போன்றவற்றை தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பான்ரி கபேட், Kitchen Set உங்கள் எண்ணம்போல் பல்வேறு வடிவங்களிலும் அழகுற செய்துதரப்படும்.

ASIAN தளபாடம்

133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
(பஸ் நிலையம் அருகில்)
T.P 077-6092425



(C/31759) (22-13-16)






## EXPOAIR எக்ஸ்போ எயார்

*your friend in the skies...* வானில் உங்கள் நண்பன்...



யாழ் பயணத்தின் போது
ஜோன்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம் – 021 2223891, 021 2226297, 071 2348888
கொழும்பு – 074 512666, 360290/1
E-mail:jaffna@expoavi.com



இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.